இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 07 செவ்வாய்க்கிழமை 23.07.2019 கதிர் 260

கன்னியா வெந்நீரூற்றுப் பிரச்சினையில் நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் அதிரடித் தீர்ப்பு ஒன்றைப் பெற்று அசத்தியிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும்ஜனாதிபதிசட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

இந்த வழக்குத் பக்கம் 02



## ஐ.தே.க. வேட்பாளர் சஜித்?

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனக் கொழும்புத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இதனை உறுதி செய்து தகவல் எதனையும் இதுவரை வெளியிடவில்லை.

ஆனாலும் இந்த முடிவு இறுதியும், உறுதியுமான முடிவாக அமையும் என அரசியல் தரப்பினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை –

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று மாலை கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் தலைமையில் கூடியபோது, ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தால் கூட்டத்தில் அமளி ஏற்பட்டதாகத் தெரியவந்தது.

பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகமான அலரி மாளிகையில் நடந்த இந்தக் கூட்டத்தின்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் கபீர் ஹாஸிம், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவா என்று பலர் தம்மிடம் கேட்பதாகவும் அதற்கு பக்கம் 11

# கன்னியாவில் விகாரை அமைக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை!

## சுமந்திரனின் சட்ட வாதத்தை ஏற்று நீதிபதி இளஞ்செழியன் பிறப்பித்தார்



திருகோணமலை,ஜூலை23

கன்னியா வெந்நீரூற்று அமைந்துள்ள பகுதியில் விகாரை ஒன்றைக் கட்டுவதற்கு எதிராக இடைக்காலத் தடை விதித்துள்ள கிழக்கு மாகாண மேல்நீதிமன்றம், அந்தப் பகுதியில் பிள்ளையார் கோயில் நிர்வாகியான மனுதாரரின் செயற்பாடுகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடாது என்பது உட்பட நான்கு இடைக்காலத் தடை உத்தரவுகளையும் பிறப்பித்தது. பக்கம் 11

## விக்கி எதிர் டெனிஸ் வழக்கு ஒகஸ்ட் 5ஆம் திகதி தீர்ப்பு!



கொழும்பு,ஜூலை23

தம்மை வடக்கு மாகாண சபையின் அமைச்சர் பதவியிலிருந்து விலக்கிய முறைமை தவறு எனத் தெரிவித்து வடக்கு மாகாண முதலமைச் பக்கம் 11

## அவசரகாலச் சட்டத்தை மைத்திரி மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்தார்

கொழும்பு, ஜூலை 23

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது. ஜனாதிபதியின் பக்கம் 11

## கோட்டாபய இன்னமும் அமெரிக்கப் பிரஜையே!

கொழும்பு, ஜூலை 23

கடந்த மார்ச் 31 வரையான முதல் காலாண்டு காலத்தில், அமெரிக்கப் பிரஜாவுரிமையைக் கைவிட்டவர்கள் தொடர்பில் அமெரிக்க பக்கம் 02

### கொழும்பு மகஸினில் உண்ணாவிரதம் இருக்கும்

## அரசியல் கைதி தேவதாஸன் எந்நேரமும் கோமா நிலைக்குச் செல்லும் பேராபத்து!



கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் நீர் கூட அருந்தாமல் கடந்த எட்டு நாள்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல்கைதிகனகசபைதேவதாசனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகத் தெரிவிக் பக்கம் 10

## கல்முனைப் பிரச்சினக்குத் தீர்வு ஒரு வாரத்தில் என்கிறார் ரணில்

### தமிழரும் முஸ்லிம்களும் முட்டி மோதக் கூடாதாம்

கொழும்பு,ஜூலை23

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தால் தமிழ் – முஸ்லிம் சமூகத்தினர் முட்டிமோதக்கூடாது. நிர்வாக ரீதியிலான இந்தப் பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பக்கம் 11

## உருப்படியாகச் செயற்படாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



### அதனால் புதிய கட்சி ஆரம்பித்தேன் என்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்

மட்டக்களப்பு, ஜூலை 23

இனப்பிரச்சினை தீர்வு, இனப்படுகொலை, காணாமலாக்கப்பட்டவர்களிற்கான நீதி, அரசியல் கைதிகள் விடயம் போன்ற பக்கம் 02

## நவ.15 – டிசெ.7 க்குள் ஜனாதிபதித் தேர்தல்!

### பிற்போடுவதற்கு மைத்திரி முயற்சிக்கமாட்டார் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 23

நவம்பர் 15ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் அவசியம் நடத்தப்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக் பக்கம் 11

## நான் முதுகெலும்பு உள்ள தலைவன்!

### பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு ஜனாதிபதி மைத்திரி பதிலடி

ஏப்ரல் 21 தாக்குதல் இடம்பெற்று மூன்று மாதங்கள் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் அரசுக்கு பக்கம் 11

## 'அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்'!

### கல்முனையில் போராட்டம்



அம்பாறை, ஜூலை 23

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பக்கம் 02

# சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனுடன் வந்தனரென மூன்று பேர் நேற்று கைது

யாழ்ப்பாணம், ஜுலை 23

மானிப்பாயில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞனுடன் தாக்குதல் நடத்த வந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், மானிப்பாய் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இணுவில் வீதியில் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பலைச் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்தனர். எனினும் அவர்கள் தப்பித்த வேளை, பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றது.

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த செல்வரத்தினம் கவிகஜன் (வயது – 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் ஆவா குழுவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கும் பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து 2 வாள்களையும் மீட்டிருந்தனர். அத்துடன், உயிரிழந்தவர் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு போலியானது என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் பதுங்கிருந்த மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்புப் பொலிஸ் பிரிவினரே சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்தனர்.

அவர்களில் இருவர், இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டபோது பின்னால் நான்காவது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் சந்தேகநபர்களைத் தேடித் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறுவதால் கைது செய்யப்பட்டோரின் விவரத்தை வெளியிட பொலிஸார் மறுத்துள்ளனர். (ஐ)

# வவுனியாவில் ஆயுதங்கள் மீட்பு!

வவுனியா, ஜுலை 23

வவுனியா புளியங்குளத்தில் வீட்டுக்கிணறொன்றில் இருந்து நேற்றுக் காலை இராணுவத்தினர் ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளனர்.



இராணுவத்தினருக்குக்கிடைத்த இரகசிய தகவலை அடுத்து புளியங்குளம் பெரியமடு விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர்,பொலிஸார்இணைந்து ஆயுதங்களை மீட்கும் செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

இதன்பொது விடுதலைப்புலிகளால்மறைத்துவைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 81 எம். எம். குண்டுகள் – 11, ரி. 56 துப்பாக்கி, மிதிவெடி உட்பட சில ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதி (வருவாய்த் துறை) செயற்பட்டு வந்த பிரதேசமாக அடையாளம்காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இத் தேடுதலானது ஓமந்தையின் 563ஆவது பிரிகேட்டின் கேணல் பண்டுக்க பெரேரா மற்றும் புளியங்குளம் விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி நிசந்த ஆகியோரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

## உருப்படியாகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றில் அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய அழுத்தம் கொடுக்காததன் காரணமாகவே, புதிய கட்சியொன்றை உருவாக்கவேண்டியேற்பட்டது எனத் தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன்.

நேற்று மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக்கூறினார்.

(விரிவான செய்தி 04ஆம் பக்கத்தில் படங்கள் 12ஆம் பக்கத்தில்)

## அரசியல்கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 11 மணியளவில், கல்முனை பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்டவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

நிபந்தனையின்றி அரசியல் கைதிகளை விடுதலை செய், பொதுமன்னிப்பு வழங்கு, நல்லாட்சி அரசில் அரசியல் கைதிகளுக்கு விடிவில்லையா? உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

இதன்போது, அங்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் சந்தர்ப்பங்களை தவறவிட்டுவிட்டனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் கன்னியா விவகாரத்தை ஜனாதிபதியிடம் கதைக்க அமைச்சர் மனோ கணேசன் கட்சிபேதமின்றி உட்பட எனக்கும் அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் இவ்விடயம் குறித்து கதைக்க வடக்கு – கிழக்கு பகுதியில் இருந்து எந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்து கொள்ளவில்லை. நான் மாத்திரமே கலந்துகொண்டிருந்தேன்.

ஆனால், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்ட போது அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் இராஜினாமாச் செய்து தங்களது இனத்தின் நலனுக்காக ஒற்றுமையாக செயற்பட்டனர். அவர்கள் தமது சமூக நலனுக்காக செயற்படுகின்றனர். எமது கூட்டமைப்பினர் பேய்க்கும் பிசாசுக்கும் வித்தியாசம் தெரியாமல் திணறுகின்றனர். பேய் வரக்கூடாது என்பதற்காக பிசாசை பாதுகாக்கின்றனர் – என்றார். (ஐ)

## அரசியல்கைதிதேவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

அவரது உணவு, குடிதண்ணீர் தவிர்ப்புத் தொடருமானால் இன்று அவரது மூளையின் இயக்கச் செயற்பாடுகள் குன்றி, அவர் கோமா நிலைக்குப் போகலாம் என சிறைச்சாலை வைத்திய வட்டாரங்கள் எச்சரித்திருக்கின்றன என நம்பகமாக அறிய வந்தது.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதியான கனகசபை தேவதாசன் கடந்த 15 ஆம் திகதி முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தன்னைப்பிணையில்செல்ல அனுமதிக்க வேண்டும்,அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர் நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.

வெலிக்கடை மகஸின் சிறையில் கடந்த பத்து வருடங்களிற்கு மேலாகதடுத்து வைக்கப்பட்டுள்ள கனகசபை தேவதாசன் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர்.

62 வயதுடைய தேவதாசன், தனக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனைக்கு எதிராக கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு வசதியளிக்குமாறு கோரியே உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையக் குண்டு வெடிப்பில் தொடர்புள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பில் கைது செய்யப்பட்ட தேவதாசனுக்கு 2017 ஆம் ஆண்டு கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆயுள்த் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

தனக்காகவாதாடசட்டத்தரணிகள் எவரையும் தேவதாசன் அப்போது அனுமதித்திருக்கவில்லை.

மாறாக, தேவாசனே தனக்காக நீதிமன்றத்தில் வாதாடியிருந்தார். மேன் முறையீடு செய்வதற்கு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணியின்றி மனு ஒன்றைத் தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு கோரி இலங்கை நீதியமைச்சுக்குத் தேவதாசன் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

ஆனால் உரிய பதில் கிடைக்கவில்லை. இதனிடையே உண்ணாவிரதம் இருக்க வேண்டாமென சிறைச்சாலை அதிகாரிகள் தேவதாசனை அச்சுறுத்தினர் எனவும் கூறப்படுகின்றது. ஆனாலும் தேவதாசன் உண்ணாவிரதத்தைத் தொடருகின்றார்.

யாழ்ப்பாணம் கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த தேவதாசன் கைது செய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், ஜே.வி.பியுடன் இணைந்து கொழும்பில் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடுக்கப்பட்ட விதம் தொடர்பில் எனக்கு இயல்பாகவே சில சந்தேகங்கள் மனதில் நெருடின. அவை குறித்து நேற்றுக் காலை ஒரு தேடுதல் நடத்தினேன்.

★ இப்படி வழக்குப் போட்டு நீதிமன்றம் மூலம் ஒரு தடை உத்தரவைப் பெற்று, பேரினவாத மேலாதிக்கத்துக்கு அங்கு ஓர் ஆப்பு வைக்க முடியுமானால், சுமந்திரன் தரப்பு நேரத்துடனேயே அதைச் செய்யாமல் இழுத்தடித்தமை ஏன்? பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பின்னால் அலைய விட வேண்டிய தேவை ஏன் வந்தது?

★ சரி. இப்போதுதான் வழக்குப் போட முடிந்தது என்றால், கடந்த வெள்ளியன்று தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் வரை அது பற்றிய செய்தி ஏதும் வெளியிடப்படாமல் மூடி மறைக்கப்பட்டமை ஏன்?

– இவற்றுக்குப் பின்னால் ஏதோ சூத்திரம் பொதிந்திருப்பதாகப் பட்டது. தேடினேன். சற்று விடயம் விளங்கியது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட காணி ஒரு நம்பிக்கை நிதியத்துக்குரிய சொத்து. அதை நிர்வகிப்பதற்கு ஒரு பெண்மணி உள்ளார்.

ஆகையினால் இதில் இனச்சிக்கல் சம்பந்தப்பட்டிருக்கின்றது என்று காட்டி பொதுநல வழக்கு ஏதும் தொடர முடியாது.

சம்பந்தப்பட்ட பெண்மணி பாதிக்கப்பட்ட தரப்பாக வழக்குத் தாக்கல் செய்ய முன்வந்தால் தான் ஏதேனும் செய்ய முடியும்.

ஆனால், சில தரப்புகள் நேரத்துடன் அந்தப் பெண்மணியை அணுகித் தாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம் என்று கூறி, அப்பெண்ணின் தரப்பு சுமந்திரன் – சம்பந்தன் பக்கம் அணுகாமல் தடுத்துப் பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றன என்ற தகவல் இப்போதுதான் மெல்லக் கசிய வந்திருக்கிறது.

தாங்களும் வழக்குப் போட்டு, அதை முன்னெடுக்க இயலாத அந்தக் ‘கற்றுக்குட்டிகள்’, விடயத்தை வேறு வழியின்றி, சுமந்திரனுக்குச் சீனியராக இருந்த மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியின் ஆலோசனைக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

சம்பந்தப்பட்ட அந்த சீனியர் சட்டத்தரணி ஒரு சமயம் அது குறித்து சுமந்திரனிடம் பிரஸ்தாபித்திருக்கின்றார். சுமந்திரனும் இந்த விவகாரத்தை வெற்றிகரமாக நகர்த்தக் கூடிய சட்ட வாய்ப்புகள், ஓட்டைகள் இருக்கின்றமை குறித்து அந்த சீனியர் சட்டத்தரணிக்கு விளக்கி இருந்திருக்கின்றார்.

அதற்குப் பின்னர் விவகாரம் நகரவேயில்லை. கிணற்றில் போட்ட கல்லாக அமுங்கிக் கிடந்தது.

விவகாரம் தன்னிடம் எடுத்து வரப்படாத நிலையில் சட்டத்தரணி என்ற முறையில் அதைத் தாமே தேடிச் சென்று அணுக முடியாத நிலைமை சுமந்திரனுக்கு. விடயத்தை சட்ட ரீதியாகக் கையாள்வதற்கு வாய்ப்பு இருந்தும் சந்தர்ப்பம் கிட்டாத கட்டம் அவருக்கு.

இரண்டு மாதங்கள் இழுபட்டன. அந்தப் பெண்மணி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். விடயம் சரிவர வில்லை. இழுபடுகின்றது.

சம்பந்தப்பட்ட கோவைகளையும் எடுத்துக் கொண்டு தாமே சுமந்திரனை அணுகினார். விவகாரம் தமது கைகளுக்கு வந்ததும், சட்டத்தரணிகளுக்கே உரிய தமது பண்பியல்புப்படி சுமந்திரன் இவ்விவகாரம் குறித்துத் தம் முடன் ஏற்கனவே உரையாடிய சீனியர் சட்டத்தரணியுடன் தொடர்பு கொண்டார்.

*“ஐயா! நீங்கள் என்னுடன் உரையாடிய மேற்படி வழக்கு விவகாரம் என்னிடமே நேரயடிகாத் தேடி வந்துள்ளது. இது உங்கள் வழக்கு. நான் என்ன செய்ய?”* – என்று கேட்டிருக்கின்றார்.

*“சுமா.... இதுநீர்தான் கையாள வேண்டிய வழக்கு. சங்கோஜப் படாமல் எடுத்து நடத்தும்”* – என்று Sportive ஆக சிரேஷ்ட சட்டத்தரணி கூற, விடயத்துக்குள் அவசர அவசரமாக மூழ்க்கினார் சுமந்திரன்.

மற்றைய சட்டத்தரணிகள் எல்லாம் மத்திய அரசின் கீழ் வரும் தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிரான வழக்கு இது என்பதால் கொழும்பில் மேனிலை நீதிமன்றங்களில்தான் இந்த வழக்கைத்தொடரவேண்டும்என்று கருதி வழக்கை இழுத்தடிக்க –

சுமந்திரன் மட்டும், மாகாண நீதிமன்றத்திலேயே இதற்கான வழக்கைத் தொடுப்பதற்கான சட்ட ஓட்டை இருப்பதைக் கண்டு பிடித்து அதற்கு ஊடாக வழக்கை நகர்த்துவதற்கு காரியங்களை முன்னெடுத்தார்.

அப்போதுதான் சம்பந்தப்பட்ட பெண்ணிடம் முதலில் வழக்குக் கோவையை வாங்கி வைத்திருந்த ‘கற்றுக்குட்டி’ சட்டத்தரணிகள் கொதித்து எழுந்தனர்.

தாங்கள் கைப்பற்றி வைத்திருந்த வழக்கை சுமந்திரனிடம் கையளித்தமைக்காக வழக்காளிப் பெண்ணுக்கு ஒரே வசவுத் திட்டு. சுமந்திரனுக்கும் கைத்தொலைபேசி மூலம் அநாகரிகச் செய்திகள்.

– இதுதான் நீதிமன்றம் மூலம் தடை உத்தரவு பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அது இவ்வளவு காலதாமதமானமைக்கும், வழக்குத் தொடரப்பட்டும் அது தொடர்பான இடைக்காலத் தடை உத்தரவுகள் நீதிமன்றத்தில் கிடைக்கும் வரை வழக்குப் பற்றிய தகவல்கள் மூடு மந்திரமாக இருந்தமைக்கும் காரணம்.

தமிழர்களின் மிக முக்கிய அரசியல் பிரச்சினை விடயத்தில் கூட, ஒரு தரப்புக்குப் பெயர் வந்திவிடக்கூடாது என்பதற்காக அப் பிரச்சினையைத் தமிழர்களுக்கு சார்பாக நகர்த்த விடாமல் தடுக்கும் அநாகரிகம் நம் தமிழர்கள் மத்தியில்தான் சாத்தியம் போலும்.

சுமந்திரனை விட மற்ற சட்டத்தரணிகள் யார் என்பதை நான் குறிப்பிட விரும்பவில்லை. அது அவர்களின் Professional Ethics தொடர்புபட்டது. ஆகவே வாசகர்களே ஊகித்தோ அல்லது தேடியோ அறிந்து கொள்ளட்டும்.

- மின்னல் -

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசால் வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இல்லை என்று தெரியவந்துள்ளது.

உள்நாட்டு இறைவரி சேவையினால் 13 மே 2019 திகதியிட்டு வெளியிடப்பட்ட ஓர் அறிவித்தலாக அமெரிக்க சமஷ்டிப் பதிவு இணையத்தளத்தில் இந்தப் பட்டியல் காணப்படுகின்றது. 31 மார்ச் 2019 வரையான முதல் காலாண்டில் அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் பெறப்பட்ட தகவலில் அமெரிக்கப் பிரஜாவுரிமையை இழந்த ஒவ்வொருவரினதும் பெயர்கள் உள்ளடக்கியதாக இந்தப் பட்டியல் காணப்படுகிறது.

இதேவேளை 17 ஏப்ரல் 2019 இல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கோட்டாபய அந்நாட்டுப் பிரஜாவுரிமையை துறப்பதற்கு ஆவணங்களைத் தாக்கல் செய்தாரென்று கலிபோர்னியாவின் மத்திய மாவட்டத்துக்கான மாவட்ட நீதிமன்றத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் அசோகா டி சில்வா தாக்கல் செய்த பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

# 'நாங்கள் இறப்பதற்கு முன்னர் பிள்ளைகளை விடுவியுங்கள்'

## வவுனியாவில் கண்ணீர்ப் போராட்டம்









வவுனியா, ஜூலை 23

வவுனியாவில் நேற்றுடன் 884 ஆவது நாள்களாகச் சுழற்சி முறையில் மேற் கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராத் தில் நேற்று மதியம் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கண்ணீர்ப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். (ஐ)

## தீர்க்கமான கட்டத்தை எட்டிய விசாரணைகள்!

கொழும்பு, ஜூலை 23

ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க படுகொலை, எக்னெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயார், உபாலி தென்னகோன் ஆகிய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றுக்கு உத்தரவிட்டவர்கள் யார் என்ற விசாரணைகள் தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

லசந்த விக்ரமதுங்க கொலை தவிர்ந்த ஏனைய சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் எனக் கூறப்படும் இராணுவப் புலனாய்வாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களே லசந்த கொலையுடனும் தொடர்புபட்டுள்ளனர் என சி.ஐ.டி. சில சான்றுகளை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

இந் நிலையில் அந்தப் புலனாய்வாளர்களுக்கு குறித்த ஊடகவியலாளர்களுடன் எவ்வித தனிப்பட்ட பகைமையும் இல்லை என்பதை உறுதி செய்துள்ள சி.ஐ.டி., யாரின் தேவைக்காக அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறித்து தீர்க்கமான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக நீதிமன்றங்களுக்கு அறிவித்துள்ளனர். (ஐ)

## வவுனியாவில் நேற்று ரயிலில் மோதுண்டு இளைஞன் சாவு!

வவுனியா, ஜூலை 23

வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் நேற்று அதிகாலை வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மூன்றுமுறிப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள தனியார் பஸ்கள் தரிப்பிடத்தில் பஸ்களைச் சுத்தம் செய்து வந்த மதுஷான் திலிந்த ஜெயவீர என்ற 25வயதுடைய கல்கமுவ பகுதியைச் சேந்த இளைஞனே இவ்வாறு உயிரிழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் ரயில் கடவைக்கு அருகே காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், சடலத்துக்கு அருகில் சில்லறைக்காசு, தீப்பெட்டி என்பனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



இந்தச் சம்பவம் விபத்தா? அல்லது தற்கொலையா? போன்ற விடயங்கள் தெரியவரவில்லை என்றும் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கின்றனர். (ஐ)

## ஷாபியின் அடிப்படை உரிமை மனு 6 ஆம் திகதி விசாரணை!

கொழும்பு, ஜூலை 23

தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்தியர் மொஹமட் ஷாபி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு ஓகஸ்ட் 6ஆம் திகதி விசாரிக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான துணை சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே, மற்ற பிரதிவாதிகளுக்கு இதுவரை அழைப்பாணை வழங்கப்படவில்லை என்று கூறினார்.

அதன்படி, இந்த வழக்கின் அடுத்த விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை வழங்குமாறு நீதிமன்றம் மனுதாரருக்கு அறிவுறுத்தியது.

குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்தியர் ஷாபி, அவர் மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை, ஆதாரமற்றவை என்று குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதம், பணமோசடி, தாய்மார்களை கருத்தடை செய்தல் போன்ற பல குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இதுவரை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்று குற்றவியல் புலனாய்வுத்துறை குருநாகல் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பாதுகாப்புச் செயலாளர் சாந்த கொட்டேகொட, சட்டமா அதிபர் தப்புலா டிலிவேரா, பதில் பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன, குருநாகல் ஓ.ஐ.சி (குற்றங்கள்) புஷ்பலால், குருநாகல் ஓ.ஐ.சி, குருநாகல் டி.ஐ.ஜி கித்சிரி ஜெயலத் மற்றும் சிஐடி இயக்குநர் சனி அபேயசேகர ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ஐ)

## தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்க 13 பேர் அழைக்கப்படவுள்ளனர்

கொழும்பு, ஜூலை 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்க 13 பேர் அழைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 20 பேரிடம் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன எனவும் இதற்கமைய, நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை இந்த மாத இறுதியில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவுக்குழுவின் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன் சாட்சியங்களை இந்த மாதத்துடன் நிறைவு செய்து, ஓகஸ்ட் மாதம் விசாரணை அறிக்கையை வெளியிடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கை நாளை 24ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெலியத்தை பிரதேச சபையின் தலைவர் சிறில் முனசிங்க கைது

கொழும்பு, ஜூலை 23

பெலியத்தை பிரதேச சபையின் தலைவர் சிறில் முனசிங்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாகாணத் தேர்தலை நினைத்தால் இந்த வருடத்திலேயே நடத்தலாம்!

### தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக சகல மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்குத் தற்போதும் சந்தர்ப்பம் உள்ளதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் அதற்கு தேவையான சட்டத்தை விரைவாக நிறைவேற்றிக்கொள்ள முடியும் என அந்த நிலையத்தின் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கூறியுள்ளார்.

அடுத்த வருடம் வரை காத்திருக்காமல், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 9 மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் மாதம் அறிவிக்கப்படவேண்டிய நிலையில், அதற்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலமொன்றை நாடாளுமன்றில் முன்வைத்து நிறைவேற்றிக்கொள்வதற்கு போதுமான காலம் உள்ளதாகவும் மஞ்சுள சுட்டிக்காட்டினார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இலங்கையில் பௌத்த காருண்யத்தின் உண்மைக் குறியீடே ஆடிக்கலவரம்

**இலங்கைத் தமிழர்களின் ஆன்மாவில் மறக்கவே முடியாத – ஆழமான வடுவை ஏற்படுத்திய – மோசமான கறை படிந்த – வரலாற்று நிகழ்வு அரங்கேறிய கறுப்பு ஜூலையில் நாம் நிற்கின்றோம்.**

**சரியாக 36 ஆண்டுகளுக்கு முன்னர் அந்தச் சரித்திரப் பெருங்கொடூரம் இந்த இலங்கைத் தீவில் இரத்தக் களரியாக நடற்தேறியது.**

**இலங்கைத் தீவின் பௌத்த – சிங்களப் பேரினவாதம் தனது கொடுங்கோன்மைத் திமிரை – பேரினவாத மிருகத்தனத்தை – தமிழர் தேசத்தின் மீதும் அதன் மக்களின் மீதும் மிக மோசமாகக் கட்டவிழ்த்து ஏவிவிட்ட பெருந்துயரின் நினைவழியா நாள்களை நாம் இன்று கடக்கின்றோம்.**

**ஓர் இனத்தின் அடி ஆன்மா வரை ஊடுருவி, அதை அடியோடு அழித்தொழிக்கும் உள்திட்டத்துடன், மிக நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்ட – திட்டமிடப்பட்ட – இன வன்முறை அராஜகத்தின் ஆரம்பப் புள்ளியே இந்த ஆடிக் கலவர அட்டகாசமாகும்.**

**பேரினவாதக் கும்பல்களின் மிருகத்தனமான கொடூரச் செயல்களையும், ஊழிக் கூத்தாக ஆடி அடங்கிய ஆடிக் கலவர வெறியாட்டத்தையும் தாங்கவே முடியாது ஈழத் தமிழினம் துவண்டு, சரிந்து போன பெரும் வரலாற்றுத் துயரின் சுவடுகள் பதிந்த ஞாபகதினம் இன்று.**

**இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் – தங்களது பாரம்பரிய தாயகப் பூமியில் – தமக்கேயுரித்தான வரலாற்றுப் பாரம்பரிய உரிமைகளையும், தன்னாட்சி முறைமையும், நீதி, நியாயமான வாழ்வியல் அடிப்படைகளையும் நாடி –**

**தமக்குப் பிறப்புரிமையான – சுதந்திர ஆட்சி முறைமையை வேண்டி – மன்றாடி நின்ற ஈழத் தமிழினம் மீது தென்னிலங்கை பௌத்த, சிங்கள மேலாண்மைத் திமிர் சக்திகள் ஆயுத முனையில் கோரக் காடைத்தனத்தையும், மூர்க்கமான அராஜகப் போக்கையும் ஏவிவிட்டதின் 36ஆவது ஆண்டின் நிறைவில் நாம் நினைவெழுந்து உயிர்க்கின்றோம்.**

**இலங்கைத் தீவு எங்கும் பரந்து வாழும் தமிழர்களைக் கண்ட இடத்தில் வெட்டிப் படுகொலை செய்வதும், அவர்களின் சொத்துக்களை – உடைமைகளை – சூறையாடுவதும், தீயிட்டு எரிப்பதுமாக அந்த இரத்தப் பிரளயம் நாள்கள் கடந்து, வாரங்கள் சென்றும் தொடர்ந்தது. வன்முறைக் கொடூரம் அலை அலையாய் – பேரினவாத ஆர்ப்பரிப்பாய் – ஓங்கிப் பிரகவித்து, வெறிகொண்டு எங்கும் எதிரொலித்து நின்றது.**

**இந்த ஆடிக் கலவர ஆழிக் கூத்தில் சுமார் மூவாயிரம் அப்பாவித் தமிழர்கள் குரூரமான முறைகளில் கொன்றொழிக்கப்பட்டனர். பல நூறு தமிழர்கள் சிங்களக் காடைக் கும்பல்களால் கதறக் கதற வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். பல தமிழ்க் குடும்பங்கள் வீடுகள், சொத்துகளோடு சேர்த்து எரிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரம் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், கைத்தொழில் நிலையங்கள், எரிபொருள் மையங்கள், சினிமா அரங்குகள் அந்த ஊழித் தீயின் கோரத் தாண்டவத்தில் சாம்பலாகின.**

**வெலிக்கடைச் சிறையில் இலங்கை நீதித் துறையின் காவலில் வைக்கப்பட்டிருந்த – ஈழத் தமிழர்களின் ஒப்பற்ற போராளிகள் என்றும், ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்கள் என்றும் போற்றப்படுபவர்களான – தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோர் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்கள சிறை அதிகாரிகளாலும், சிங்களக் கைதிகளினாலும் சிறைக் கூண்டுக்குள்ளேயே வைத்து வெட்டி, கண்கள், முகங்கள் கொடூரமாகக் குத்திப் பிடுங்கிக் குதறிப் படுகொலை செய்யப்பட்டனர். இலங்கையின் சட்டத்துறையில் நீதி தேவதைக்குப் பதிலாக அநீதிப் பிசாசே கோலோச்சுகின்றது என்பதற்கான குறியீடாக அந்த வரலாற்றுப் பெரும் சோகம் நாட்டின் நீதித் துறையின் சிறைக் கூண்டுக்குள்ளேயே அரங்கேறி அடங்கியது.**

**இந்த 1983 ஆடிக் கலவரம் இனமுறுகலின் காரணமாக எதேச்சையாக – இயல்பாக – தன்னிச்சையாக – கண்மூடித்தனமாக – இடம்பெற்ற கொடூரமன்று.**

**தாக்குதல் நடத்தியோர் எல்லை மீறி – தறிகெட்டு – கும்பல்போக்கில் – செயற்பட்டவர்களும் அல்லர்.**

**தமிழர்களைத் தேடித் தேடி நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு, வழிப்படுத்தப்பட்டு, கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையாகவே அது இடம்பெற்றது.**

***'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'*** **என்று அன்றைய ஆட்சித் தலைவர் பிரகடனப்படுத்திய பின்னரே இவை எல்லாம் கட்டம் கட்டமாக நடந்தேறின. அன்றைய ஆட்சித் தரப்பினது அரூபக்கரங்களின் அச்சொட்டான வழிகாட்டலில் அரங்கேறிய அராஜகங்களே அவை என்பது சந்தேகத்துக்கு இடமின்றிக் கண்டறியப்பட்டுள்ளது.**

**காருண்யர் புத்தரின் பஞ்சசீலத்தைப் பின்பற்றுவதாகக் கூறிய தார்மீக அரசின் கீழ் இந்தக் கொடூரம் அரங்கேறியமை இந்தத் தீவில் பௌத்தத்தின் நிலை யாது என்பதற்கு இன்னும் ஒரு வரலாற்றுச் சாட்சியாக உள்ளது என்பது மறுக்க – மறைக்க – முடியாத உண்மை.**

# தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த ஒன்றிணையுமாறு மட்டு. மக்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு

**மட்டக்களப்பில் தமிழ் மக்கள் கூட்டணிக்கு மக்கள் தொடர்பு பணிமனை ஒன்றை நேற்றுத் திறந்து வைத்து அதன் செயலாளர் நாயகம் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரை இது :-**




மட்டக்களப்பில் தமிழ் மக்கள் கூட்டணிக்கு மக்கள் தொடர்பு பணிமனை ஒன்றை உருவாக்க உதவிய சகலருக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகள். மாமாங்கப் பிள்ளையாரின் கொடி ஏறி முடிய, எமது கொடியும் ஏற்றப்பட்டுள்ளது. அதாவது, எமது பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நாள் தொடக்கம் தேவைகள் இருக்கும் எம்மக்களும் எம்முடன் சேர்ந்து அரசியலில் பயணிக்க விரும்பும் எம்மக்களும் இங்கு வந்து எமது செயற்குழு அங்கத்தவர்களைச் சந்தித்துச் செல்லலாம். அவர்களுக்கு எம்மாலான உதவிகளை நாம் புரிய கடமைப்பட்டுள்ளோம். நிதி நெருக்கடிகள் இருந்தாலும் அவற்றை சமாளிக்கக் கூடியவர்கள் எமது கட்சி உறுப்பினர்கள்.

எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பல தசாப்தங்களாக நாம் போராடி வருகின்றோம். சொல்லொண்ணாத் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி, மாபெரும் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு, தொடர்ச்சியாக இன நீதி மறுக்கப்பட்டு, சொந்த மண்ணிலேயே அடிமைகளாக வாழ்ந்து வருகின்ற துயர் நிலையைக் கொண்டவர்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம்.

ஆரம்ப காலங்களில் முஸ்லிம் சகோதரர்கள் எம்முடன் இணைந்தே போராடினார்கள். என்னுடன் சட்டக் கல்வி பெற்ற அக்கால சட்ட மாணவரான காலஞ் சென்ற மஷூர் மௌலானா ஒரு காலத்தில் தந்தை செல்வாவின் வலதுகரமாக திகழ்ந்தார். நண்பர் அஷ்ரப் கூட தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்தே தமது அரசியல் பணியை ஆரம்பித்தார். இன்று எம்மிடையேயான ஒற்றுமை, புரிந்துணர்வு யாவும் தேய்ந்து வருகின்றமையைக் காண்கின்றேன். சுயநலம் எம்மை பிளவுபடுத்தியுள்ளதைக் காண்கின்றேன்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழர்களின் ஆயுதம் தழுவிய உரிமை மீட்புப் போராட்டம் 2009 மே மாதத்தோடு மௌனிக்கப்பட்டு இவ்வாண்டோடு பத்தாண்டுகள் நிறைவு பெறுகின்றன.

இந்நிலையிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்படாமலும், இனப் படுகொலைக்கான நீதி, போர்க் குற்றவிசாரணை, வலிந்துகாணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிப்பு, போர் முடிந்து இராணுவத்தினர் வெளியேறுதல் போன்ற பல விடயங்களில் ஆட்சிஅதிகாரத்தில் உள்ளவர்கள் சற்றேனும் கவனம் செலுத்துபவர்களாகத் தெரியவில்லை. எம்மவரும் அதுபற்றி அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்ற மனோ நிலையில் இல்லை. தமது தனிப்பட்ட நன்மைகளையே தமது பதவிகளை வைத்து பெற்றுவர எத்தனித்துள்ளார்கள்.

இதன் விளைவாகவே கொள்கையில் உறுதியோடு, இன விடுதலையை முதன்மைப்படுத்தி, நீதியின் வழி நின்று செயலாற்ற தமிழ் மக்கள் கூட்டணி என்கின்ற கட்சியை நிறுவவேண்டியது காலத்தின் கட்டாயமாகிற்று. உங்கள் அனைவரதும் அயராத உழைப்பும், ஒத்துழைப்பும், பொறுமையுமே எமது கட்சியை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்ல வல்லன.

வட கிழக்கு மாகாண தமிழ் மக்களின் உரிமைகளை வென்றடுப்பதற்கான தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல், பொருளாதார, சமூகரீதியான செயற்பாடுகளில் மட்டக்களப்பு மக்கள் முழுமையான அளவில் பங்கு பற்றி எம்மை பலப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.

எமது மக்களுக்கு எதிரான இனப் படுகொலை திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட போதும் பீனிக்ஸ் பறவைபோல புத்துயிர் பெற்று இன்றைய தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் முதுகெலும்பாக எம் மக்கள் செயற்பட்டு வருகின்றமையைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன்.

பலவருடங்களாக வீதிகளில் நின்று எம் மக்கள் பற்றுறுதியுடன் மேற்கொண்டு வரும் பல்வேறு போராட்டங்களைக் கண்டு கொண்டுதான் இருக்கின்றேன். அத்துடன் கண்டு நான் உள்ளக் கிளர்ச்சி அடைந்திருக்கின்றேன். உதாரணத்திற்கு திருகோணமலையில் ஆளுநர் மாளிகைக்கு முன்பாக இன்றும் காணாமற்போனோரின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உங்கள் போராட்டங்கள் ஒருபோதும் வீண் போகா. உங்கள் போராட்டங்களுக்கான எம்மாலான உதவிகளை வழங்கும் வகையிலும் உரிமைகளை வென்றெடுப்பதற்கான எமது செயற்பாடுகளுக்கு உங்களின் உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலுமே இன்று இந்தப் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது.

பல கஷ்டங்கள் மத்தியில் இந்தப் பணிமனையை திறந்து வைத்து எதிர்காலத்தில் சிறந்த முறையில் மக்கள் சேவை ஆற்றுவதற்கான பல்வேறு திட்டங்களை எம்மவர்கள் வகுத்திருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எமது இந்தப் பணிமனையுடன் இணைந்து எமது மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசாரரீதியானஅபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் இந் நிகழ்விலும், கட்சிசார் செயற்பாடுகளிலும், தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் பணியிலும் எம்மோடு பயணிக்க அனைவரையும் அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றேன்.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை நிறைவேற்றாமல் பல்வேறு ஏமாற்று வழிமுறைகளை இலங்கை அரசாங்கம் கையாண்டு ஏமாற்றி வந்த நிலையில், அவற்றுக்கு எதிராக தொடர்ச்சியாக உண்மைநிலைமைகளை எடுத்துக் கூறி எம் மக்கள் நேர்கொண்ட போராட்டங்களும் அரசியல் செயற்பாடுகளுமே ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன. இலங்கையில் என்ன நடைபெற்று வருகின்றன, உண்மை நிலைமை என்ன, மக்களின் உணர்வுகள் என்ன என்பவை பற்றி எல்லாம் சர்வதேச சமூகத்துக்கு எட்டியிருக்கின்றது என்பதையே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அதாவது, போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகத் தன்மையான உள்ளக விசாரணை நடைபெறவில்லை என்பதால் போர்க் குற்றம் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்து வழக்கு தொடரும் நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் தனது இலங்கை தொடர்பான அறிக்கையில் உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரைத்திருக்கின்றது.

சித்திரவதை, வலிந்து காணாமல் செய்யப்படுதல், போர்குற்றங்கள் அல்லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை குறிப்பாக சர்வதேச நியாயாதிக்க கோட்பாடுகளுக்கு அமைவாக விசாரணை செய்து வழக்கு தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் சபை, மற்றும் ஏனைய மனிதஉரிமைகள் பொறிமுறைகள் ஆகியவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றும்பொருட்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை** 24.07.2019 புதன்கிழமை

நட்சத்திரம்: ரேவதி பி.ப 1.46 வரை
திதி : ஸ்ப்தமி பி.ப 3.15 வரை
இராகுகாலம் : 12.02 – 1.32
சுப நேரம் : 4.32 – 6.02

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை புதன்கிழமை** காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்-**

தனங்கிளப்பு, மறவன்புலவு, அறுகு வெளிய ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரையான பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகின்றது சு.க. மத்திய செயற்குழு!

**கொழும்பு, ஜூலை 23**
**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதியைத் திரிபால சிறிசேன தலைமையில் நாளை புதன்கிழமை மாலை கொழும்பில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல், புதிய அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன.**



அத்துடன், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாக உயர்நீதிமன்றத்திடம் விளக்கும் கோருவதற்கு எடுத்த முடிவு தொடர்பில் இதன்போது செயற்குழு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் முயற்சி கைவிடாத பட்சத்தில் அடுத்து எவ்வாறான அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. (ஐ)

## பெரும்போக நெல்லை களஞ்சியப்படுத்த முடிவு

கொழும்பு, ஜூலை 23

நெல்லை விற்பனை செய்வதற்கு ஆரம்பத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டபோதிலும் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் அவற்றை மொத்தக் கையிருப்பாக வைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பா மற்றும் நாட்டு நெல் இந்த மொத்தக் கையிருப்பில் அடங்கியுள்ளன. 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சந்தையில் அரிசி விலையை அதிகரிப்பதற்குத் தனியார் வர்த்தகர்கள் செயற்பட்டால், நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில், இந்த நெல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க குறிப்பிட்டார்.

## ஜி.சீ.ஈ (உயர் தர) பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

கொக்குவில், ஜூலை 23

கொக்குவில் இந்துக் கல்லூரி க.பொ.த உயர்தரத்தில் இரண்டாந் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று செவ்வாய்க்கிழமை இலிருந்து வழங்கப்படும் என்றும் மாணவர்கள் பாடசாலை சீருடை அணிந்து தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருமாறும் அதிபர் அறிவித்துள்ளார்.

## இலஞ்ச வழக்கில் சாட்சியமளிப்பதற்கு இந்தியத் தொழிலதிபருக்கு அழைப்பு!

கொழும்பு, ஜூலை 23

கந்தளாய்சீனித்தொழிற்சாலை சம்பந்தப்பட்ட இலஞ்சவழக்கில் சாட்சியம் அளிக்க இந்தியத் தொழிலதிபர் ஒருவருக்கு விசேட மேல் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

செயலிழந்துள்ள கந்தளாய் சீனித் தொழிற்சாலையை இயக்கும் உரிமத்தை பெற, 45 கோடி ரூபா கோரியதாக இரண்டு உயரதிகாரிகள் மீது, இந்தியத் தொழிலதிபர் கே.நாகராஜா இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்திருந்தார்.

நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான கேள்வி கோரலை முதலீட்டுச் சபை தனக்கு வழங்கியதாகவும், இந்த அதிகாரிகள் இலஞ்சம் கோரும் முயற்சியில் இந்தச் செயல்முறையைத் தடுத்து வருவதாகவும் தொழிலதிபர் கூறியிருந்தார்.

விசாரணையின்போது, முன்னாள் ஜனாதிபதி செயலகப் பிரதானி குசும்தாச மகாநாமா மற்றும் லஞ்சம் கோரிய முன்னாள் அரசமரக் கூட்டுத்தாபனத் தலைவர் பி. திசநாயக்க ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செப்ரெம்பர் 09 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதிமன்றம் அறிவித்தது. (ஐ)

## ஐ.தே.கவின் கூட்டணியில் இணையும் எண்ணமில்லை

### கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் எதிர்வரும் 5ஆம் திகதி உருவாக்கப்படவுள்ள கூட்டணியில் இணைந்து கொள்ளும் எதிர்பார்ப்பு இதுவரை தனக்கு இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில், அநுராதபுரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில், பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## கஞ்சாவுடன் சிறுவன் கைது!

திருமலை, ஜூலை 23

திருகோணமலை – சாம்பல்தீவு பாலத்தில் உள்ள பொலிஸ் காவலரணில் , பட்டா ரக வாகனத்தில் கேரளக் கஞ்சா கொண்டு சென்ற சிறுவன் உள்ளிட்ட இரண்டு சந்தேக நபர்களைத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பட்டா ரக வாகனமொன்றில் சாம்பல் தீவிலிருந்து புல்மோட்டைக்கு கேரளக் கஞ்சா கொண்டு செல்லப்படுவதாகத் திருகோணமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சாம்பல்தீவு பாலத்தில் வைத்து பொலிஸார் அந்த பட்டா வாகனத்தைச் சோதனையிட்டபோது 2 கிலோ 400 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. 26 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும் 16 வயதுடைய சிறுவன் ஒருவனும் இதன்போது கைது செய்யப்பட்டனர் எனத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களைத் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இதுவரை 4624 சாரதிகள் கைது!

*கொழும்பு, ஜூலை 23*

*நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகளின்போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 4624 சாரதிகள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கடந்த 05ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் இந்தச் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரையான காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 237 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ)*

# அமெரிக்கப் படைகளை அனுமதிக்கும் மறுக்கும் உரிமை இலங்கைக்குரியதே!

### தூதுவர் அலைய்னா ரெப்லிட்ஸ் கருத்து



கொழும்பு, ஜூலை 23

இலங்கையுடன் சிறப்புப் படைகள் ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ள அமெரிக்கா விரும்புகிறதே தவிர, இங்கு இராணுவத் தளத்தை அமைக்கும் எண்ணம் ஏதும் கிடையாது என அமெரிக்க தூதுவர் அலைய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இங்கு வரும் அமெரிக்கப் படையினர் தொடர்பான வரையறைகளை உருவாக்கும் நோக்கிலேயே வருகைப் படைகள் உடன்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து இன்னமும் இரண்டு நாடுகளும் பேசிக் கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே உள்ள உடன்பாட்டை புதுப்பித்துக் கொள்வது தான், வருகைப் படைகள் உடன்பாடு. இது அதிகார மற்றும் விதிமுறைகள் தொடர்பான அதிகப்படியான, சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு, 2017 இல் இலங்கையில் வெள்ளம் ஏற்பட்டபோது, இலங்கை அரசு அமெரிக்காவின் உதவியை நாடியது. அமெரிக்க விமானங்கள், நிவாரணப் பொருள்களைக் கொண்டு வந்தபோது, அந்த விமானங்களுக்கு அரசிடம் அனுமதி பெறவேண்டிய தேவை ஏற்பட்டது.

அவசர நிலைமைகளின்போது, இந்த நடைமுறைகளை விரைவுபடுத்த அமெரிக்காவுக்குப் புதிய உடன்பாடு அனுமதிக்கும்.

அதிகப்படியான விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளில் நேரத்தைச் செலவிட நாம் விரும்பவில்லை.

இந்த உடன்பாடு இரு நாடுகளினதும் நலனுக்கான விதிகளை வகுக்கிறது. எந்தத் தளத்தையும் அமைக்கும் நோக்கமோ, அமெரிக்கப் படைகளை நிரந்தரமாக நிறுத்தும் எண்ணமோ எமக்குக் கிடையாது.

அமெரிக்கப் படையினர், கப்பல்கள் மற்றும் விமானங்களின் அனைத்து நுழைவுக்கும் ஒப்புதல் அளிக்கின்ற அல்லது மறுக்கின்ற உரிமையை சிறிலங்காவே கொண்டிருக்கும் – என்றார். (ஐ)

# விண்ணில் பாய்ந்தது நேற்று 'சந்திரயான் - 2' ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் மகிழ்ச்சி ஆரவாரம்

## நேற்று பிற்பகல் 2.43 மணிக்கு சாதனைப் பயணம்

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 23

இந்திய விண்வெளி ஆராய்ச்சி பணிகளில் அளப்பரிய பெரும் சாதனையாக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 'சந்திரயான்-2' விண்கலம் நேற்று வெற்றிகரமாக தனது பயணத்தை தொடங்கியது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோ கடந்த 2008 ஆம் ஆண்டு சந்திரயான் விண்கலத்தை சந்திரனில் ஆய்வு செய்ய அனுப்பியது. அந்த திட்டம் வெற்றி பெற்றதை யடுத்து சந்திரகிரகத்தின் தென் துருவத்தில் இறங்கி ஆய்வு மேற்கொள்ள சந்திரயான்-2 விண்கலத்தை அனுப்ப இஸ்ரோ முடிவு செய்து அதற்கான பணியில் ஈடுபட்டது.

அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி அதிகாலை சந்திரயான்-2 விண்கலம் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்தது.

ஆனால், அன்று அதிகாலை பி.எஸ்.எல்.வி. மார்க்-3 ராக்கெட்டில் எரிபொருள் நிரப்பப்பட்ட போது, தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதை யடுத்து சந்திரயான்-2 ஏவப்படுவது நிறுத்தப்பட்டது.



தொழில் நுட்ப கோளாறை சரி செய்யும் பணியில் விஞ்ஞானிகள், என்ஜினியர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். கோளாறு சரி செய்யப்பட்டதால் 22 ஆம் திகதி பிற்பகல் 2.43 மணிக்கு சந்திரயான்-2 விண்கலம் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்தது.

சுமார் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 'சந்திரயான்-2' விண்வெளி பயணத்துக்கான 20 மணிநேர கவுன்ட்டவுன் நேற்று முன்தினம் (ஞாயிறு) மாலை 6.43 மணிக்கு தொடங்கியது. நேற்றுக் காலை முதல் சந்திராயனை விண்ணில் செலுத்துவதற்கான ஆயத்தப் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

சந்திராயனை சுமந்து செல்லும் பி.எஸ்.எல்.வி. மார்க்-3 ராக்கெட்டில் திரவ ஒக்சிஜன் மற்றும் சி-25 எனப்படும் 'கிரயோஜெனிக்' படிநிலைக்கு திரவ ஹைட்ரோஜன் போன்றவை நிரப்பும் பணிகள் பிற்பகல் 1.40 மணியளவில் நிறைவடைந்தன.

பிற்பகல் 1.43 மணியளவில் அடுத்த ஒரு மணி நேரத்துக்கான (3600 வினாடிகள்) இறுதிக்கட்ட கவுன்ட்டவுன் தொடங்கியது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி பணிகளில் ஒருகட்டமாக சந்திரனை ஆய்வு செய்யும் அளப்பரிய பெரும் சாதனையாக 'சந்திரயான்- 2' விண் கலம் வெற்றிகரமாக தனது பயணத்தை தொடங்கியது.

ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் குவிந்திருந்த விஞ்ஞானிகள், என்ஜினியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து இந்தக் காட்சியை நேரில் பார்வையிட வந்திருந்த வர்கள் அனைவரும் இந்த வெற்றியை கர வொலி எழுப்பி, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடினர்

# வரலாற்று வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் எனது சல்யூட்!

## இஸ்ரோ தலைவர் சிவன் பெருமிதம்

பெங்களூரு, ஜூலை23

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் இன்று; 'சந்திராயன் - 2' திட்டத்திற்கு உழைத்த அனைவருக்கும் எனது சல்யூட் - என இஸ்ரோ தலைவர் சிவன் கூறினார்.




இந்த விண்கலத்தை ஏவும் பணிக்குப் பொறுப்பாக விருந்த இஸ்ரோ அமைப்பின் தலைவர் சிவன் நேற்றுப் பிற்பகல் பேசும்போது கூறியவை வருமாறு:-

'சந்திரயான் - 2' விண்கலத்தை பூமி சுற்றுப்பாதையில் செலுத்தியதாக அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சோதனைகளை முறியடித்து 'சந்திரயான்-2' விண்ணில் பறந்துள்ளது. நிலவின் தென் துருவத்தில் 'சந்திரயான் - 2' கால் பதிக்கும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகள் சிறிதும் ஓய்வின்றி 'சந்திரயான் 2' இற்காக இஸ்ரோ விஞ்ஞானிகள் அனைவரும் உழைத்தனர். அவர்கள் உழைப்பால்தான் நேற்று இந்த சாதனை நடந்துள்ளது.

இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடுமையான உழைப்பிற்கு கிடைத்த வெற்றி இது. வெற்றிக்கு உழைத்த அனைத்து தரப்பினருக்கும் எனது பாராட்டுக்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் இன்று. 'சந்திரயான் - 2' திட்டத்திற்கு உழைத்த அனைவருக்கும் எனது சல்யூட். அடுத்தடுத்து பல செயற்கைகோள்களை ஏவத்திட்டமிட்டுள்ளோம் - என கூறினார்.

(உ)

# ராகுல் காந்தியின் இடத்துக்கு காங். தலைவராக பிரியங்கா?


## கட்சியின் மூத்த தலைவர் நட்வர்சிங் சூசகத் தகவல்

புதுடில்லி, ஜூலை23



காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ராகுல் காந்தி ராஜினாமா செய்துள்ள நிலையில் அந்த வாய்ப்பு பிரியங்கா காந்திக்கு வழங்கப்படலாம் என மத்திய முன்னாள் மந்திரி நட்வர் சிங் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று காங்கிரஸ் தலைவர் பதவியை ராகுல் காந்தி ராஜினாமா செய்தார்.



ராஜினாமா முடிவை கைவிடுங்கள் என்று 5 மாநிலங்களை ஆளும் காங்கிரஸ் முதலமைச்சர்கள் மற்றும் சில நாள்களுக்கு மரணம் அடைந்த டெல்லி முன்னாள் முதல் மந்திரி ஷீலா டிக்ஸிற்உள்ளிட்டோர் முன்னர் ராகுல் காந்தியை சந்தித்து வலியுறுத்தியும் அந்தப் பேச்சு தோல்வியில் முடிந்தது.

இதற்கிடையில், ராஜினாமா முடிவை ராகுல் காந்தி கைவிட வேண்டும் என வலியுறுத்தி டில்லியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தின் அருகே சில நாள்களாக அக் கட்சியின் தொண்டர்கள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், தனது முடிவில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்பதில் ராகுல் உறுதியாக உள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ராகுல் காந்தியின் ராஜினாமா ஏற்கப்பட்டால் தலைவர் பதவியில் அவரது தங்கை பிரியங்கா காந்தி நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதா என்ற செய்தியாளரின் கேள்விக்கு காங்கிரஸ் கட்சியின் மிக மூத்த தலைவரும் மத்திய முன்னாள் மந்திரியுமான நட்வர் சிங் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பாக பிரியங்கா காந்திதான் தீர்மானிக்க வேண்டும். ஏற்கனவே, 'காந்தி குடும்பத்தில் இருந்து வராத யாராவது ஒருவர்கூட காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ஆகலாம்' என்று ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.

இந்த முடிவில் இருந்து அவரது குடும்பம் தற்போது பின்வாங்க வேண்டி இருக்கும் என நட்வர் சிங் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராக தமிழகத்தை சேர்ந்த டி.ராஜா ஏகமனதாகத் தெரிவு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக தமிழகத்தைச் சேர்ந்த டி.ராஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



இதுவரை பொதுச் செயலாளராக இருந்து வந்த சுதாகர் ரெட்டியின் உடல் நலம் பாதிக்கப்பட்டமையை அடுத்து அவர் பதவி விலகினார். இதையடுத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் கூட்டத்தில் புதிய பொதுச் செயலாளராக டி.ராஜா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

தலித் சமுதாயத்தில் இருந்து இந்தப்பதவிக்கு வந்துள்ள முதல் நபர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. 70 வயதான டி.ராஜா, 1994 ஆம் ஆண்டு முதல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளராக இருந்து வருகிறார். இரண்டு முறை நாடாளுமன்ற மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வானதை தொடர்ந்து, டி.ராஜாவின் சொந்த ஊரான வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே உள்ள ஒலக்காசி கிராமத்தில் மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

# நடித்தபடி மேடையில் மரணித்த நகைச்சுவை நடிகர் மஞ்சுநாத்!

பிரபல நகைச்சுவை நாடக நடிகர் மஞ்சுநாத் டுபாயில் மேடையில் நாடகம் நடித்துக் கொண்டிருந்த போது மாரடைப்பு ஏற்பட்டதால் திடீரென உயிரிழந்தார்.



ஆனால் அதை அறியாத ரசிகர்கள் நாடகத்தில் இதுவும் ஒருகாட்சி என்று அவர் துடிதுடித்து விழுந்து உயிரை விட்டமையையும் ரசித்துக் கொண்டிருந்தனர். இந்திய வம்சாவளியான 36 வயதேயான மஞ்சுநாத் நாயுடு, டுபாயில் மேடையில் நடித்துக் கொண்டிருந்த போது இந்தச் சோக சம்பவம் நடந்தது.

வழக்கமாக மேடையில் தோன்றினாலேயே ரசிகர்களை சிரிக்க வைக்கக்கூடிய இந்த காமெடி நடிகர் அன்று எல்லோரையும் இறுதியில் கண்ணீரில் மூழ்கடித்து விட்டார்.

# ஈரானினால் மடக்கப்பட்ட இங்கிலாந்துக் கப்பலில் பணியாற்றும் 18 இந்தியர்கள் உட்பட 23 மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளனர்




தெஹ்ரான்,ஜுலை23

ஹோர்முஸ் ஜலசந்திப் பகுதியில் ஈரானால் சிறை பிடிக்கப்பட்ட இங்கிலாந்துக் கப்பலில் இருக்கும் இந்தியர்கள் உள்பட 23 மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளனர் என அந்த நாட்டு துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுவீடன் நாட்டின் ஸ்டீனா பல்க் நிறுவனத்துக்குச் சொந்தமான ஸ்டீனா இம்பெரோ என்ற எண்ணெய் கப்பல் இங்கிலாந்துக் கொடியுடன் கடந்த 19 ஆம் திகதி பாரசீக வளைகுடா பகுதியில் சென்று கொண்டிருந்தது. இந்த கப்பல் ஹோர்முஸ் ஜலசந்தியில் சென்று கொண்டிருந்தபோது அதனை ஈரான் திடீரெனச் சிறைபிடித்தது.

சர்வதேசக் கடல்வழி விதிகளை மீறியதால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது. குறிப்பாக தங்கள் நாட்டு மீன்பிடிப் படகில் மோதிவிட்டு, அபாய அழைப்புக்குச் செவிமடுக்காமல் சென்றதால்தான் அதனைச் சிறைப் பிடித்ததாக அந்த நாடு குறிப்பிட்டு இருக்கிறது.

இந்த எண்ணெய்க் கப்பலில் 23 மாலுமிகள் உள்ளனர். இதில் கப்பலின் கேப்டன் உள்பட 18 பேர் இந்தியர்கள் ஆவர். மீதமுள்ளவர்களில் 3 பேர் ரஷ்யாவையும், தலா ஒருவர் லாத்வியா, பிலிப்பீன்ஸையும் சேர்ந்தவர்கள் ஆவர். இந்த கப்பல் தற்போது பந்தர் அப்பாஸ் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. மாலுமிகள் அனைவரும் அதிலேயே தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இங்கிலாந்துப் போர்க்கப்பல் பாதுகாப்புடன் சென்றபோதும் இந்தக் கப்பலை ஈரான் சிறை பிடித்தது சர்வதேச அரங்கில் அதிர்வலைகளை கிளப்பி இருக்கிறது. குறிப்பாக ஈரானின் இந்த நடவடிக்கை இங்கிலாந்துக்குப் பெரும் அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. கப்பலையும், மாலுமிகளையும் உடனடியாக விடுவிக்குமாறு ஈரானை அந்த நாடு வலியுறுத்தி இருக்கிறது.

முன்னதாக சிரியா மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பொருளாதாரத் தடையையும் மீறி அந்த நாட்டுக்கு எண்ணெய் கொண்டு சென்ற ஈரானின் 'கிரேஸ் 1' கப்பலை கடந்த 4ஆம் திகதி மத்திய தரைக்கடல் பகுதியில் இங்கிலாந்து சிறைப் பிடித்தது. அதன் காவலை மேலும் 30 நாள்களுக்கு நீடித்த நிலையில், ஈரான் இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறது.

எனவே இதை ஒரு பழிக்குப் பழி நடவடிக்கையாகவே ஈரான் மேற்கொண்டு இருப்பதாக கூறியுள்ள இங்கிலாந்து, இது முற்றிலும் ஏற்க முடியாதது எனவும் குறிப்பிட்டுள்ளது. மேலும் ஸ்டீனா இம்பெரோ கப்பலை ஓமன் நாட்டு கடற்பகுதியில் வைத்து ஈரான் சிறை பிடித்து இருப்பதாகவும் இங்கிலாந்து குற்றம் சாட்டி உள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலுக்கும் இங்கிலாந்து கடிதம் எழுதியுள்ளது.

இதைப்போல ஈரானின் செயலுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளும் கண்டனம் தெரிவித்து உள்ளன. மேலும் நேட்டோ அமைப்பின் உறுப்பு நாடுகளும் கவலை வெளியிட்டு உள்ளன.

இந்த நிலையில் கப்பலில் இருக்கும் இந்தியர்கள் உள்பட 23 மாலுமிகளும் பாதுகாப்பாக இருக்கின்றனர் என ஈரான் அறிவித்து உள்ளது. இது தொடர்பாக ஈரானின் ஹோர்மோஸ்கான் மாகாண துறைமுகம் மற்றும் கடல்வழி ஆணைய தலைமை இயக்குநர் அல்லா மொராத் அபிபிபுர் கூறியிருப்பவை வருமாறு:-

ஸ்டீனா இம்பெரோ கப்பலில் உள்ள 23 மாலுமிகளும் முழு ஆரோக்கியத்துடன் பாதுகாப்பாக இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் கப்பலுக்குள் இருக்கின்றனர். கப்பல் பாதுகாப்பாக நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு இருக்கிறது. மாலுமிகளின் தேவைகளை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால் கப்பல் தொடர்பாக நாங்கள் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது. கப்பல் ஊழியர்களின் ஒத்துழைப்பை பொறுத்தே இந்த விசாரணை அமையும். கடவுள் விரும்பினால் விசாரணை தொடர்பான அனைத்து தகவலும் விரைவில் சேகரிக்க முடியும் என நம்புகிறோம். - இவ்வாறு அல்லா மொராத் கூறினார்.

இதற்கிடையே கப்பலில் இருக்கும் மாலுமிகளை மீட்க அவர்களின் சொந்த நாட்டு அரசுகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அந்தவகையில் இந்திய மாலுமிகளை மீட்க இந்திய மத்திய அரசு தீவிர முயற்சியில் இறங்கி உள்ளது. இது தொடர்பாக வெளியுறவுத்துறை அதிகாரிகள் ஈரான் அரசுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டு உள்ளது.



## இம்ரானுக்கு அமெரிக்காவில் உரிய வரவேற்பு இல்லையாம்

வொஷிங்டன்,ஜுலை23

அமெரிக்காவில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு உரிய வரவேற்பு அளிக்கப்படாதமை குறித்து சமூக வலைத்தளத்தில் கேலி செய்யப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அவர் நேற்று ஜனாதிபதி டிரம்பைச் சந்தித்துப் பேசவிருந்தார்.

சிக்கன நடவடிக்கையாக பிரதமர் இம்ரான்கான் பயணிகள் விமானத்தில் அமெரிக்கா சென்றார்.

பொதுவாக அமெரிக்கா வரும் வெளிநாட்டுத் தலைவர்களை அமெரிக்க வெளியுறவு மந்திரியோ அல்லது வெளியுறவு அமைச்சகத்தின் உயர்மட்ட அதிகாரிகளோ நேரில்சென்று வரவேற்பது வழக்கம். ஆனால் டல்லாஸ் விமான நிலையத்தில் சென்று இறங்கிய இம்ரான்கானை வரவேற்க அமெரிக்க அதிகாரிகள் யாரும் வரவில்லை.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி குரேஷி, மற்றும் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஆசாத் எம் கான் ஆகியோர் மட்டுமே இம்ரான்கானை வரவேற்றனர் எனவும், பின்னர் அவர் மக்களுடன் சேர்ந்தே விமான நிலையத்தை விட்டு வெளியேறினார் எனவும், கூறி பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி டுவிட்டரில் வீடியோ ஒன்றை வெளியிட்டு உள்ளது.

# பாகிஸ்தான் வம்சாவளியினர் மத்தியில் வொஷிங்டனில் பிரதமர் இம்ரான் உரை

## பலுசிஸ்தான் ஆர்வலர்கள் எதிர்ப்புக் கோஷம்




வொஷிங்டன்,ஜுலை23

அமெரிக்கா சென்றிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அங்குள்ள பாகிஸ்தானிய வம்சாவளியினர் மத்தியில் உரை நிகழ்த்தினார். அச்சமயம் இம்ரான் கானுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் பலுசிஸ்தான் ஆர்வலர்கள் கோஷம் எழுப்பினர்.

அமெரிக்காவுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணமாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் சென்றுள்ளார். இம்ரான் கான் வொஷிங்டனில் பாகிஸ்தான் வம்சாவளி மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.





இந்த நிகழ்வில் ஏராளமான பாகிஸ்தான் வம்சாவளியினர் கலந்து கொண்டனர். அவர்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் இம்ரான் கான் உரை நிகழ்த்தி கொண்டு இருந்த போது, அங்கு வந்து இருந்த பலுசிஸ்தான் ஆர்வலர்கள் இம்ரான் கானுக்கு எதிராக கோஷம் இட்டனர். இதையடுத்து, அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு இருந்த பாதுகாவலர்கள் அவர்களை உடனடியாக வெளியே செல்லுமாறு வலியுறுத்தினர்.

இதற்கிடையே, பலுசிஸ்தானில் மக்கள் காணாமல் போவதற்கு, டிரம்ப் தலையிட்டு முடிவு கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி பதாகைகளை ஏந்தி பலுசிஸ்தான் குழுவினர் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதே கோரிக்கையை வலியுறுத்தி வொஷிங்டன் டிசி நகரில் பிரம்மாண்ட பதாகைகளையும் பலுசிஸ்தான் ஆர்வலர்கள் வைத்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அமெரிக்கா வந்திருப்பது இதுதான் முதல் முறையாகும். முதல் முறையாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை நேருக்கு நேர் இம்ரான் கான் சந்தித்துப் பேச இருந்தார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் வருகையை எதிர்த்து வொஷிங்டனில் போராட்டங்கள் நடைபெற்றன.

அமெரிக்காவில் பல மாகாணங்களில் இருந்தும் போராட்டக்காரர்கள் ஒன்றிணைந்து வொஷிங்டன் டிசிக்கு வந்து தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். முத்த ஹிதா கவாமி இயக்கம் (Mutta hida Qaumi Movement), சிறுபான்மையினர் இயக்கங்கள் உள்ளிட்டவை இந்த போராட்டத்தில் பங்கேற்றன.

பாகிஸ்தான் இராணுவத்துக்கு இனியும் வெற்றுக் காசோலை கிடையாது என்று தெரிவித்தும், பாகிஸ்தானில் சிறுபான்மையினர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்தக் கோரியும் அவர்கள் பதாகைகளை ஏந்தினர்.

பாகிஸ்தான் ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டையும் நீக்க அவர்கள் வலியுறுத்தினர். மேலும், பாகிஸ்தானுக்கு எந்த நிதியுதவியோ, ஆதரவோ வழங்கக் கூடாது என்பதை தங்கள் போராட்டம் வாயிலாக அமெரிக்க அதிபரிடம் கோரிக்கையாக முன்வைப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(உ)

காலைக்கதிர் Kalaikathir



# தமிழர் நெஞ்சங்களில் என்றுமே அழியாத கறுப்பு ஜூலை துயரம்

கறுப்பு ஜூலைக் கலவரம் மற்றும் வன்முறைகளிலும் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கும், வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் காடையர்களால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் போராளிகளையும் இன்றைய நாளில் நினைவு கூர்ந்து, அவர்களின் தியாகங்களை நெஞ்சில் நிறுத்தி, தலைகுனிந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.



சரியாக 36 வருடங்களுக்கு முன்பு 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை நாட்டை அப்போதைய ஆட்சியாளர்களால் பாதாளத்திற்குள் தள்ளப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான இன வெறியாட்டம் அரங்கேற்றப்பட்ட கறுப்பு நாள் இன்றாகும். யாழ். குடாநாட்டின் திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதலில் 13 இராணுவச் சிப்பாய்கள் பலியானதும் இந்த வன்முறைகளுக்கான காரணமாக கூறப்பட்டாலும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களானது, ஆட்சியாளர்களாலும், இனவாதிகளாலும் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பாதுகாப்பு படையினரின் கண்முன்னே காடையர்களால் நடத்தப்பட்ட அந்த கொலை வெறி தாக்குதல்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் சதியை எல்லோராலும் உணர முடியும்.

13 இராணுவத்தினர் பலியான சம்பவத்திற்கும், அப்பாவித் தமிழ் மக்களின் படுகொலைகளுக்கு எந்தவிதத்திலும் நியாயமாகாது. அந்த வன்முறைகளும், படுகொலைகளுமே இலங்கையில் உள்நாட்டுபோர் கூர்மையடைவதற்கும், முப்பது வருடங்களாக நீடிப்பதற்கான காரணமாகவும், ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உயிர் இழக்கவும் காரணமாக அமைந்திருந்தது.

தொடர்ந்த வன்முறைகளால் கோடானு கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 15 லட்சத்திற்கும் அதிகமானோர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாயினர். இதனால் இலங்கையின் நற்பெயருக்கு சர்வதேசத்தினரிடையே களங்கம் ஏற்பட்டது. இலங்கை உலக நாடுகளின் கண்டனத்திற்கும்வெறுப்பிற்கும்உட்பட்டது. இலங்கையின் ஏற்றுமதி, சுற்றுலாத்துறை, பொருளாதாரம் என்பன பெரும் வீழ்ச்சி கண்டன.

★ ★ ★

## சிங்கள ஆட்சியாளரின் திட்டமிட்ட செயல்

கறுப்பு ஜூலை (ஆடிக் கலவரம்) என்பது ஜூலை 23, 1983 தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பியல் நிகழ்வாகும் இது தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கை படையினரை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் படுகொலை செய்ததின் தூண்டுதல் விளைவு எனப்பட்டபோதும், இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே நம்பப் படுகிறது. கறுப்பு ஜூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப் படுகின்றது.

வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின்போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வைக் குறிக்கும். இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதி உயர்பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப் படுகொலை நிகழ்வில் எவரும் இதுவரையில் குற்றஞ்சாட் டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

25-7-1983 இல் இலங்கையில் இனவெறி கோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தமிழ் இனப் படுகொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், தீவைப்புகளில் சிங்கள இனவெறியர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அன்று பிற்பகல் இரண்டு மணியில் இருந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சிறிது நேரத்திற்குப்பின் சிறை அதிகாரிகள் தமது திட்டத்தை மிகவும் நுட்பமாக நிறைவேற்றத் தொடங்கினார்கள்.

ரெஜஸ் – துணைத் தலைமை சிறை அதிகாரி, சமிதரத்ன – சிறை அதிகாரி, பாலித– காவலதிகாரி. ஆகிய மூன்று சிறை அதிகாரிகளுமே இனப் படுகொலைக்கு சிறைக்குள்ளே திட்டம் போட்ட சூத்திரதாரிகள்.

திட்டமிட்டபடி இவ்வதிகாரிகள் குறிப்பிட்ட சிறைக் கைதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு சாராயம், கசிப்பு போன்ற மது வகைகளைக் கொடுத்து, உற்சாகப்படுத்திக் கொலை வெறியைத் தூண்டினர். அந்த நேரத்தில் சிறைச்சாலை உயரதிகாரிகள் மதிய உணவுக்காகத் தத்தம் வீடுகளுக்குச் சென்றிருந்தனர். உயர் அதிகாரிகள் சிறையில் இல்லாத போது நடந்த வன்முறையெனத் தப்பித்துக் கொள்ள இந்த ஏற்பாடு.

தருணம் பார்த்துக் கொண்டிருந்த கொலை வெறியர்கள் தங்கள் வெறியாட்டத்தை ஆரம்பித்தார்கள். மணி பிற்பகல் 2.30. பயங்கர

## வெலிக்கடை சிறையில் அரசியல் கைதிகள் 53 பேர் துடிக்க, துடிக்கப் படுகொலை

வெறிக்கூச்சல் எழுப்பிக் கொண்டு கொலைகாரர்கள் ஆயுதபாணிகளாகத் தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டு இருந்த சப்பல் கட்டடத்தை நோக்கி ஓடி வந்தார்கள்.

**(10 ஆம் பக்கம் பார்க்க...)**



## ஆடிக் கலவரம் வெடித்தது எப்படி?

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அஞ்சல் பெட்டிச் சந்தியில் 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக இராணுவத்தினர் பயணம் செய்த வாகனங்களின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய வழி மடக்குத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

ஆயுத மோதல்கள் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில் ஒரே தாக்குதல் சம்பவத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிகழ்வு.

அந்நிகழ்வில் படுகாயமடைந்திருந்த மேலும் இரண்டு படைச் சிப்பாய்கள் பின்னர் மரணமடைந்தமையை அடுத்து, இந்தத் தாக்குதலில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்திருந்தது. ஆயினும் இந்தச் சம்பவத்தில் உடனடி யாகக் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரே பொதுவாக இதில் உயிரிழந்தனர் எனக் குறிப்பிடப் படுகின்றது.

இறந்த இராணுவத்தினருடைய சடலங்களுக்கு கொழும்பு பொரளையில் உள்ள கனத்தையில் இறுதிநிகழ்வுகள் செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. இதனை உறவினர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் விரும்பவில்லை. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இது பின்னர் கலவரமாக வெடித்தது.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போன்று யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்கு ஒருவரை உயிரோடு எரித்து விட்டார்கள் என்றும், கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் வந்து விட்டார்கள் என்றும் காட்டுத் தீ போன்று பரப்பப்பட்ட வதந்திகளையடுத்து, கொழும்பு நகரின் பல இடங்களிலும், ஏனைய பல நகரங்களுக்கும் கலவரங்கள் பரவின.

இந்தக் கலவரங்களில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். சில இடங்களில் குடும்பமாகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் வெளியாயின. இக் கலவரங்களில் சுமார் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆயினும் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகம் என்றே கூறப் படுகின்றது.



# கிழக்கில் பறிபோகின்றன தமிழ் மக்களின் காணிகள்!

## வடக்கு முன்னாள் முதல்வர் விக்கி கவலை

**மட்டக்களப்பு, ஜூலை 23**
**மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் காணிகளை கூடிய விலைக்கு முஸ்லிம்கள் கொள்வனவு செய்வதாக மக்கள் தன்னிடம் தெரிவித்துள்ளார்கள் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**
**மட்டக்களப்பு – கதிரவெளி கிராமத்தில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் மக்கள் சந்திப்பு நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான் சென்ற இடங்கள் எல்லாம், காணிகள், உரித்துக்கள் பறிபோகின்றதன எனவும், இதற்கு காரணமாக முஸ்லிம்கள் இருக்கின்றனர் எனவும் மக்களால் என் னிடம் கூறப்பட்டது. அதாவது குறைந்த விலையில் உள்ள காணிகளை கூடிய விலை கொடுத்து வாங்குவதாகக் கூறப்படுகின்றது. எமது மக்கள் ஏதோவொரு காரணத்திற்காக விற்பனை செய்து விட்டு சென்றார்கள் என்றால் அந்த இடத்தில் வந்து முஸ்லிம்கள் குடியிருக்கின்றார்கள்.



வறுமையின் காரணமாக எமது பெண்கள் மதம் மாறுவது பிரச்சினையாக உள்ளது. இதனால் எமது உரித்துக்கள் பறிபோகின்றன. இவற்றுக்கெல்லாம் எவ்வாறு முகம்கொடுக்க வேண்டும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நாங்கள் எங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் பலமாக இருந்தால் எங்கள் பெண்கள் வெளியில் போக மாட்டார்கள், எங்களது காணிகளை மற்றவர்கள் கொள்வனவு செய்வதற்கு அவசியம் இருக்காது.

ஏனெனில் நாம் பொருளாதார ரீதியாக நல்ல நிலைமைக்கு வந்தால் எமது காணிகளை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஏழ்மை நிலையில், வசதியற்ற நிலையில் இருந்தோமானால் மற்றவர்களின் சதிக்குள் செல்ல வேண்டிய நிலைவரும்.

தங்கள் வாழ்க்கை நிலைமையை மாற்ற சகலதையும் செய்ய வேண்டும். உங்கள் கிராமத்தை முன்னேற்ற நீங்கள் முன்வர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எங்களால் முடியும் என்ற நம்பிக்கை வரவேண்டும்.

புதிய வாழ்க்கையை கொண்டு வரவுள்ளோம் என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்க வேண்டும். அத்தோடு பொறுமையும் இருக்க வேண்டும். எங்களுடைய கனிய வளங்களை பெறுவதற்காக மக்களிடம் பல பொய்களை கூறி வளத்தினை பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகின்றது.

எனவே இதனை எவ்வாறு தடை செய்யலாம், இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம், இதனை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்று பல கோணங்களில் இருந்து பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள எமது தமிழ் மக்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. எல்லாம் போய் விட்டது இனி என்ன நடக்கப் போகின்றதோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் உள்ளதை நான் காண்கின்றேன் – என்றார். (ஐ)

# ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய கூட்டணி ஓகஸ்ட் 5 இல்

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்யப்படும் எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கூட்டணி அமைப்பது தொடர்பிலான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. கூட்டணியின் யாப்பு தயாரிக்கும் பணியும் நிறைவடைந்துள்ளன. கூட்டணியின் சின்னம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்துத் தீர்மானங்கள் குறித்து எதிர்வரும் ஓகஸ்ட் 05 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் வைத்து நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளோம். ஜனநாயக தேசிய முன்னணியாகவே இந்த கூட்டணி மக்களிடம் வருகின்றது – என்றார். (ஐ)

# தமிழ் தேசியத்தைப் பலப்படுத்த...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)


கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவையில் ஒரு தீர்மானத்தினைக் கொண்டு வந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட பல தரப்புக்களுக்கும் நாம் அனுப்பிய தீர்மானத்தில் இந்த விடயங்களையும் உள்ளடக்கியிருந்தோம். இவை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. அவர்களின் இந்தப் பரிந்துரைகளை நாம் வரவேற்கின்றோம். அதே வேளை, இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு கொண்டு செல்லவேண்டும் என்றும் நாம் எமது தீர்மானத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம். அண்மையில் அமெரிக்க அரசாங்க அலுவலர்கள் என்னை சந்திக்க வந்த போதும் நான் இதை வலியுறுத்தினேன். ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை இலங்கை நிறைவேற்றுவதற்கு தவறி இருக்கும் நிலையில் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லவேண்டிய தன் அவசியத்தை சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவும் சிலவாரங்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபை விசேட பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யவேண்டும் எனப் பலதமிழ்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. ஆகவே எமது இந்த வலியுறுத்தல்கள் நடைமுறைக்கு வரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமது அரசியல், இராஜதந்திர செயற்பாடுகளை வகுத்து செயற்பட வேண்டும். அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுப்பதும் எமது நிலையை உலகறியச் செய்து எமது நாட்டின் தலைவர்களை வெட்கித் தலைகுனிந்து தம்மை மாற்றும் ஒரு சூழல் ஏற்படுத்துவதுமே எமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

அத்துடன் கட்சிசார் செயற்பாடுகளிலும், தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் பணியிலும் கொள்கை ஒருமைப்பாடு கொண்ட அனைவரையும் எம்மோடு பயணிக்க அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றேன்.

# பயங்கரவாதம் தொடர்பாக புதிய சட்டங்கள் வேண்டும்

## பிரதமர் ரணில் வலியுறுத்தல்



கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் எனவும், பழைய சட்டங்களினால் நாட்டில் புதுவடிவ பயங்கரவாதத்துக்கு முகம்கொடுக்க முடியாது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் பிரதமர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சட்டம் என்பது அடிக்கடி மாற்றம் செய்யப்படக் கூடிய ஒன்றாகும். இங்கிலாந்தில் மாத்திரம் 2001 இற்கும் 2019 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் 15 தடவைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவிலும் இவ்வாறு சட்டம் மாற்றப்பட்டுள்ளது.

புலிப் பயங்கரவாதத்தை ஒழித்தது போன்று, சர்வதேச ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது. அதற்கு எமது நாட்டில் சட்டத்தை மாற்றம் செய்யவேண்டும். சிலர் சட்டத்தை மாற்றக் கூடாது என கருத்துத் தெரிவித்து வருகின்றனர் - என்றார். (ஐ)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

# வவுனியாவில் இருந்து மீண்டும் நீர்கொழும்பு சென்ற அகதிகள்!



கொழும்பு, ஜூலை 23

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடமாகாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு அகதிகளில் 18 பேர் மீள நீர்கொழும்புக்கு நேற்றுமுன்தினம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டங்களாக அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடமாகாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பிரதேச அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரது எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் இராணுவ பொலிஸ் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 ஆண்களும் 4 பெண்களும் என 16 வெளிநாட்டு அகதிகள் மீள நீர்கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# வடக்கு குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி சாதனை!



முல்லைத்தீவு, ஜூலை 23

வடமாகாண குத்துச்சண்டை போட்டி வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் கடந்த 17,18,19, ஆம் திகதிகளில் வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கு இடையேயான ஆண், பெண் அணிகளுக்கான போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள் குத்துச்சண்டைப் போட்டியில் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் அடிப்படையில்

1ஆம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டமும்
2ஆம் இடத்தை கிளிநொச்சி மாவட்டமும்
3ஆம் இடத்தை வவுனியா மாவட்டமும்
4ஆம் இடங்கள்யாழ்ப்பாணம் மன்னார் மாவட்டங்களும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் அணி

1 ஆம் இடம் முல்லைத்தீவு மாவட்டம்
2 ஆம் இடங்களை வவுனியா மன்னார் மாவட்டங்களும்
3 ஆம் இடம் கிளிநொச்சி மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

முல்லைத்தீவு மாவட்ட குத்துச் சண்டை அணி சார்பாக உடுப்புக்குளம் உண்ணாபிலவு கோவில்குடியிருப்பு செல்வபுரம் முள்ளியவளை மாமூலை தண்டுவான் புதுக்குடியிருப்பு கரிபட்டமுறிப்பு மாங்குளம் துணுக்காய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் போட்டியில் பங்குபற்றி இருந்தனர். (ஐ)

# மேற்கிந்தியத் தொடரின் இந்திய அணி அறிவிப்பு




மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரானதொடரில்பங்கேற்கவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கட் சபையினால் இந்த அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் மற்றும் இந்திய அணிகள் 3 இருபதுக்கு இருபது, 2 டெஸ்ட் போட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளன.

விராட் கோஹ்லி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள டெஸ்ட் தொடருக்கான அணியில் மிக நீண்ட இடைவெளிக்கு பின்னர் தமிழக வீரர் அஸ்வின் இடம் பிடித்துள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள ரி – 20 அணி விவரம் வருமாறு,

விராட் கோஹ்லி (தலைவர்), ரோகித் சர்மா (துணை தலைவர்), ஷிகர் தவான், கே.எல்.ராகுல், ஷ்ரேயஸ் அய்யர், மனீஷ் பாண்டே, ரிஷப் பண்ட், குருணால் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர், ராகுல் சஹார், புவனேஷ்வர் குமார், கலீல் அகமது, தீபக் சஹார், நவ்தீப் சைனி

ஒருநாள் போட்டிக்கான வீரர்கள் வருமாறு:

விராட் கோஹ்லி (தலைவர்), ரோகித் சர்மா (துணை தலைவர்), ஷிகர் தவான், கே.எல்.ராகுல், ஷ்ரேயஸ் அய்யர், மனீஷ் பாண்டே, ரிஷப் பண்ட், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், யுவேந்திர சாஹல், கேதார் ஜாதவ், மொகமட் ஷமி, புவனேஷ்வர் குமார், கலீல் அகமது, நவ்தீப் சனி.

டெஸ்ட் போட்டிக்கான வீரர்கள் வருமாறு:

விராட் கோஹ்லி (தலைவர்), ரஹானே (துணை தலைவர்), மயங்க் அகர்வால், கே.எல்.ராகுல், புஜாரா, ஹனுமா விஹாரி, ரோகித் சர்மா, ரிஷப் பண்ட், விரித்திமான் சஹா, ரவிசந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், இஷாந்த் சர்மா, மொகமட் ஷமி, ஜஸ்பிரித் பும்ரா, உமேஷ் யாதவ். (ஐ)

# யுவான்ரஸ் அணியை வீழ்த்தியது ரொட்ரென்ஹாம்

ஐரோப்பிய உதைபந்தாட்ட கழகங்கள் பங்குபற்றும் இடையிலான சர்வதேச சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் போட்டிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் ஒரு போட்டியில் ஹரி கேனின் அபார கோலால் யுவான்ரஸ் அணியை 3–2 என வீழ்த்தி ரொட்ரென்ஹாம் அணி வெற்றி பெற்றது.

சர்வதேச சம்பியன்ஸ் கிண்ண உதைபந்துத் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் யுவென்ரஸ் மற்றும் ரொட்ரென்ஹாம் அணிகள் மோதின.




ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் ரொட்ரென்ஹாம் அணியின் சார்பில் எரிக் லமேலா கோல் ஒன்றை போட்டார். இதனால் முதல் பாதி நேரத்தில் ரொட்னம் அணி 1 – 0 என முன்னிலைப் பெற்றிருந்தது.

2ஆவது பாதி நேர ஆட்டம் தொடங்கியதும் யுவான்ரஸ் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஆட்டத்தின் 56ஆவது நிமிடத்தில் ஹிகுயைன் மற்றும் 60ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் அபாரமான கோல்களை புகுத்தினர்.

ஆனால் 65ஆவது நிமிடத்தில் ரொட்ரென்ஹாம் அணியின் லூக்காஸ் மவுரா கோல் ஒன்றை அடித்த நிலையில், 2 – 2 புள்ளிகள் சமநிலை அடைந்தன.

அதன்பின் சுமார் 25 நிமிடங்களுக்கு இரண்டு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை. 90 நிமிடங்கள் முடிந்த பின்னர் ஆட்ட நிறுத்தத்தை கணிக்கிட்டு 4 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்பட்டது.

3ஆவது நிமிடத்தில் ஹாரி கேன் மைதானத்தின் பாதி தூரத்திற்கு அப்பால் இருந்து உதைத்த பந்து கோலாக மாறியது. இதனால் ரொட்ரென்ஹாம் அணி இறுதி நேரத்தில் 3 – 2 என வெற்றி பெற்றது. (ஐ)

# தமிழர் நெஞ்சங்களில் ......

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி ...)

தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடங்களின் கதவுகள் ஏற்கெனவே இனவெறியர்களின் வரவுக்காகத் திறந்து வைக்கப்பட்டு இருந்தன. கத்திகள், பொல்லுகள், வாள், கோடரிகள், இரும்புக் கம்பிகள், குத்தூசிகள், விறகுக் கட்டைகள், தமிழ் இளைஞர்களின் உடல்களில் பதம் பார்க்கத் தொடங்கின.

வீரத்தமிழ் இளைஞர்களின் செங்குருதி சிறைக் கட்டடத்திற்குள் ஆறாக ஓடத் தொடங்கியது. தலைகள் பிளக்கப்பட்டன. கண்கள் தோண்டப்பட்டன. இதயங்கள் கிழிக்கப்பட்டன. குடல்கள் உறுவப்பட்டன. குரல்வளைகள் அறுக்கப்பட்டன. கை, கால்கள் துண்டிக்கப்பட் டன. இவ்வளவு கொடூரச் சித்திரவதைகளும் சிறைக்காவலர்கள் முன்னிலையிலேயே நடைபெற்றன.

சிங்கள சிறைக்கைதிகள், தமிழ் அரசியல் கைதிகளைக் கொல்வதை இனவெறி பிடித்த சிங்கள சிறைக் காவலர் பார்த்து ரசித்தார்கள். கொலைகள் முடிந்தவுடன் கண்துடைப்பு நடவடிக்கையாக வெளியே காவலுக்கு நின்ற இராணுவ வீரர்கள் (தமிழ் அரசியல் கைதிகள் தப்பியோடாது இராணுவ வீரர்கள் வெலிக்கடையில் தொடர்ந்து காவலுக்கு நின்றார்கள்) உள்ளே அழைக்கப்பட்டார்கள். உள்ளே வந்த இராணுவ வீரர்கள் கொலை வெறிக்கு உரமூட்டினார்கள்.

ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த் தும் இப்படு கொலைக்குத் தமது தார்மீக ஆதரவையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தார்கள். வெலிக்கடையில் இப்படு கொலைகள் நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளை ஹெலிகொப்டர் ஒன்று வெலிக்கடைச் சிறை யின்மேல் தாழப் பறந்து கொண்டு இருந்தது. இது வெலிக்கடைக் கொலைக்கும் அரசாங்க உயர் மட்டத்திற்கும் இருந்த தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை கிடைத்த வேளையில் அவர்கள் இருவரும் தங்களது கண்களைக் கண்பார்வை யற்ற தமிழர்களுக்கு அளிக்கும் படியும் அதன் மூலம் மலரவிருக்கும் ஈழத்தைப் பார்க்க வேண்டும் என்றும் உருக்கமான பொருள் நிறைந்த வேண்டுகோளை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இதே காரணத்திற்காகக் குட்டிமணி குற்றுயிருடன் வெளியே இழுத்துவரப்பட்டு, சிறைச்சாலையின் மத்தியில் போடப்பட்டார். சிங்கள வெறியர் விசிலடித்து ஆர்ப்பரித்து ஜெயவேவா" (மகிழ்ச்சி ஆரவாரம்) கோஷம் எழுப்பிக் குட்டிமணியின் கண்கள் இரண்டையும் கூரிய ஆயுதம் ஒன்றினால் தோண்டியெடுத்தனர்.

குட்டிமணியின் கண்கள் தோண்டியெடுக் கப்பட்டதும் சிங்களக் கைதிகள் கைதட்டி விசிலடித்து வெறியுணர்ச்சி பொங்க ஆர்ப்பரித்தனர். அதே வேளை குட்டிமணியின் கண்களைத் தோண்டிய இனவெறியன் ஏனைய சிங்களக் கைதிகளினால் தோளில் தூக்கப்பட்டுச் சிங்கள வீரனாகக் கொண்டாடப்பட்டான். ஏனைய கைதிகள் குட்டிமணியின் உடலைக் குத்திக் கிழித்து அவரின் ஆணுறுப்பையும் வெட்டினார்கள். இறுதியாக 15 வெறியர்கள் குட்டிமணியின் குருதியைக் குடித்தனர்.

பின்னர் சிங்கள இனவெறியர் அங்கு அமைக் கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலை யின் முன் குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண் களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது. காட்டு மிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாண மாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள புத்த வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து "சில்" அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

சிறுவன் மயில்வாகனத்திற்கு ஏற்பட்ட மர ணம் மனதை உருக்குவதாகும். இச்சிறுவன் கப்பற்படையினரின் தண்ணீர் எடுத்துச் செல்லும் வாகனத்திற்கு (பவுசர்) பொன்னாலைப் பாலத்தடியில் வெடிகுண்டு வைத்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தான்.

இச்சிறுவன் சப்பல் கட்டடத்திற்கு வெளியே சாதாரண கைதிகளுக்கு உணவு வழங்கப்படும் இடத்தில் மறைந்திருந்ததைக் கண்ணுற்ற சிறை அதிகாரி சமிரத்ன அச்சிறுவனின் தலைமயிரைப் பிடித்திழுத்துக் கத்தியால் அவன் குரல்வளையை வெட்டினான். இரத்தம் பீறிட்டுவர அச்சிறுவனும் புத்தருக்குக் காணிக்கையாக் கப்பட்டான். இச்சிறுவனைப் படுகொலை செய்த சமிதரத்ன ஒரு பட்டதாரியாவான் என்பதும் வெட்கக்கேடான உண்மையாகும்.

சிறைச்சாலை வாகனத்தில் ஈழ விடுதலைப் போராட்ட இளைஞர்களின் உடல்கள் முழு நிர்வாணமாகப் போடப்பட்டன. அந்த உடல்களின் மத்தியில் உயிர்ப் பிரிவின் முனகல் கேட்டபோது கொலை வெறியர் பொல்லால் அடித்து கம்பியால் குத்தி அவ்வொலிகளை நிரந்தரமாக நிறுத்தினார்கள்! *

## கன்னியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் நீண்ட சட்ட வாதத்தை நேற்று செவிமடுத்த திருகோணமலையில் அமரும் கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத் தின் நீதிபதி எம்.இளஞ்செழியன் இந்த இடைக்கால உத்தரவை நேற்றே உடனடியாக வழங்கினார்.

திருகோணமலை, மாரியம்மன் கோயில் முகாமையாளரும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான கணேஷ் பெண் கோகிலரமணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணைகள் கோரும் விண்ணப்பத்தின் அடிப்படையிலான வழக்கை நேற்று விசாரித்த பின்னரே இந்த உத்தரவை நீதிபதி வழங்கினார்.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களான தொல்பொருள் ஆணையாளர் நாயகம், திருகோணமலை அரச அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

தொல்பொருள் திணைக்களம் மத்திய அரசின் கீழ் வருகின்றது. எனினும், அது மேற்படி சர்ச்சைக்குரிய விடயங்களில் வழங்கும் உத்தரவுகள் மாகாணங்களில் உள்ள காணிகள் பற்றியவை என்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், காணி விவகாரம் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் முழுவதுமாக மாகாணங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விடயம் என்பதால் இவ்விடயத்தில் தலையிட்டு உத்தரவிடும் நியாயாதிக்கம் மாகாண மேல்நீதிமன்றுக்கு உண்டு என வாதிட்டார்.

அந்த வாதத்தின் அடிப்படையில் இந்த விடயத்தைக் கையாளும் முழு அதிகாரம் மாகாண மேல்நீதிமன்றுக்கு உண்டு என்ற தீர்மானத்துக்கு நீதிமன்றம் வந்தது.

மனுதாரர் கோகிலரமணி திருகோணமலை மாரியம்மன் கோவிலின் முகாமையாளரும் நம்பிக்கைப் பொறுப்பாளரும் என்பதை ஆவணங்களோடு நீதிமன்றில் நிரூபித்த சட்டத்தரணி சுமந்திரன், அந்தக் கோயின் ஆதனங்களின் ஒன்றே கன்னியா வெந்நீருற்றும் அதற்கு அருகில் பிள்ளையார் கோயில் அமைந்துள்ள மேடும் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஆவணங்களின் ஆதாரங்களோடு கொண்டுவந்தார்.

இதன் அடிப்படையில், அந்த ஆதனத்தில் தொல்பொருள் திணைக்கள ஆணையாளரின் அறிவித்தலின் பேரில் அத்துமீறி இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சுமந்திரன் விவரித்தார். அவற்றைக் கருத்தில் எடுத்த நீதிபதி பின்வரும் இடைக்கால உத்தரவுகளை வழங்கினார்.

★பிள்ளையார் கோயில் இருந்த இடத்தில் விகாரை ஒன்றைக் கட்டுவதற்கு இடைக்காலத்தடை.

★ எதிர்மனுதாரர்களோ, அவர்களது முகவர்களோ வெந்நீர் ஊற்றிற்கோ, பிள்ளையார் கோயிலுக்கோ செல்வதைத் தடுக்காமலும், ஆனால் அவர்கள் அங்கு அனுமதிச் சீட்டு விற்பதைத் தடுக்கும் இடைக்காலக் கட்டளை.

★ மனுதாரர் மாரியம்மன் கோயிலின் கீழ் உள்ள காணிகளில் புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதைத் தடுக்கக் கூடாது என்று இடைக்காலக் கட்டளை.

★மாரியம்மன் கோயிலின் கன்னியாவில் இருக்கும் ஆதனங்களை மனுதாரரும் அவரது பணியாளர்களும் நிர்வகிப்பதைத் தடுக்காமல் இருப்பதற்கான இடைக்காலக் கட்டளை.

– ஆகிய நான்கு இடைக்காலத் தடை உத்தரவுகள் வழங்கப்பட்டன.

எனினும் கன்னியா பிள்ளையார் கோயிலை மனுதாரர் புனர்நிர்மாணம் செய்வதைத் தடுக்காமல் இருப்பதற்கான இடைக்காலக் கட்டளை ஒன்றை விடுக்குமாறு மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் ஏற்று உத்தரவிட மறுத்துவிட்டது.

வழக்கமாக இத்தகைய வழக்குகளில் எதிர்மனுதாரர்கள் பிரசன்னமாகியிருக்காவிட்டால் – அத்தரப்புகளுக்கு உரிய நோட்டீஸ் உத்தரவு வழங்கப்பட்டிருக்காவிட்டால் – இத்தகைய இடைக்காலத் தடை உத்தரவுகள் 14 நாள்களுக்கு விடுக்கப்பட்டு – அவ்வப்போது 14 நாள்களுக்கு ஒருமுறை – நீதிமன்றத்தினால் நீடிக்கப்படும்.

ஆனால் இந்த வழக்கு கடந்த வெள்ளியன்று தாக்கல் செய்யப்பட்டாலும் அதுபற்றிய நோட்டீஸ் அறிவித்தல் அவசர பதிவுத் தபால் மூலமும், மேலும் ஒரு எதிர் மனுதாரரான திருகோணமலை அரச அதிபருக்கு உடனடியாக வெள்ளியன்று – நேரடியாகவும், விநியோகிக்கப்பட்டன என்பதை ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆதாரங்களுடன் நிரூபித்தார்.

அதைக் கவனத்தில் எடுத்த நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை இந்த வழக்கு முடிந்து தீர்ப்பு வரும்வரை செல்லுபடியாகும் விதத்தில் வழங்கினார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் சட்டத்தரணி கேசவன் சயந்தனும் திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்.

வழக்கு ஓகஸ்ட் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## நான் முதுகெலும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக முன்வைக்கப்படும் சகல குற்றச்சாட்டுக்களையும் நான் நிராகரிக்கின்றேன். என்னை முதுகெலும்பற்ற ஒரு தலைவராக சுட்டிக்காட்ட சிலர் முயற்சிக்கின்ற போதிலும், நேரடியான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய முதுகெலும்புடைய ஒரு தலைவர் என்பதை 2015ஆம் ஆண்டு தேர்தலின்போதும் அதன் பின்னர் பல தடவைகளிலும் வெளிப்படுத்தியுள்ளளேன்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்வைத்த விமர்சனத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் சேதமடைந்த நீர்கொழும்பு கடுவாப்பிட்டிய செபஸ்தியார் தேவாலயம் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முதுகெலும்பில்லாதவர்கள் ஆற்றலுள்ளவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு வீட்டுக்குச் செல்லுமாறு இந்த தலைவர்களிடம் கூறுகின்ற நேரம் வந்துள்ளது என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையுமே இவ்வாறு விமர்சித்தார் என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் தான் முதுகெலும்புள்ள தலைவர் என்றும் தனது ஆளுமை பற்றியும் ஜனாதிபதி நேற்றுப் பதிலளித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற சத்விரு அபிமன் 2019 இராணுவத்தினருக்கு நலன்புரி நன்மைகளை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரான காலத்தில் அரசு தனது அனைத்து கடமைகளையும் நிறைவேற்றியுள்ளதுடன், அந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்பை இலங்கையிலிருந்து ஒழித்தது மாத்திரமன்றி, அந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு ஏதுவாக அமைந்த சகல விடயங்கள் தொடர்பாகவும் தற்போது பக்கச்சார்பற்ற – சுயாதீனமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் தீர்மானங்களை முன்வைக்க வேண்டாமென நான் சகல தரப்பினிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் அனைத்து சமயங்களையும் மதிக்கும் ஒரு தலைவர் என்ற வகையில் அனைத்து மதத் தலைவர்களையும் போற்றுகின்றேன். ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் யாராக இருப்பினும் அவை தொடர்பில் எம்முடன் வெளிப்படையாக கலந்துரையாட முடியும். தேவையேற்படின் ஊடகங்களுக்கு முன்னாலும் அதனை மேற்கொள்ள முடியும்.

என்னை முதுகெலும்பற்ற ஒரு தலைவராகச் சுட்டிக்காட்ட சிலர் முயற்சிக்கின்றபோதிலும், நேரடியான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய முதுகெலும்புடைய ஒரு தலைவர் என்பதை 2015ஆம் ஆண்டு தேர்தலின்போதும் அதன் பின்னர் பல தடவைகளிலும் வெளிப்படுத்தியுள்ளளேன்.

கடந்த அரசைப் போன்றே தற்போதுள்ள அரசிலும் இடம்பெறும் ஊழல், மோசடிகளை கண்டறிவதற்கு முதுகெலும்புடைய ஒரு தலைவர் என்பதனாலேயே ஆணைக்குழுக்களை நியமிக்க நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். கடத்தல்காரர்கள், பாதாள உலகத்தினர், குற்றவாளிகள் மற்றும் ஊழல்வாதிகளுடன் போராடுவதற்கும் அதுவே காரணமாகும்.

முதுகெலும்புடைய தலைவர்கள் மேற்கொள்ள வேண்டியது விமர்சனங்களை முன்வைப்பது அன்றி கடத்தல்காரர்கள், குற்றவாளிகள் மற்றும் ஊழல்வாதிகளிடமிருந்து நாட்டை காப்பாற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவதாகும்.

விமர்சனங்கள் தேவையானவை என்றபோதிலும் அவை நாட்டையும் மக்களையும் தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடிய, அரசை அசௌகரியங்களுக்கு உட்படுத்தக்கூடிய பாரதூரமான விமர்சனங்களாக அமையக்கூடாது. இன்று இந்த விமர்சனங்களை முன்வைக்கும் சகலரும் ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலின் பின்னர் எமது வீரமிக்க இராணுவத்தினர் உள்ளிட்ட ஒட்டுமொத்த பாதுகாப்புத் துறையினரும் தமது உயிரைத் துச்சமாக மதித்து நிறைவேற்றிய உன்னத மனித நேய செயற்பணிகளையே காட்டிக்கொடுக்கின்றனர்.

மேலும் ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற துன்பியல் சம்பவத்தில் உயிரழிந்தவர்கள் தொடர்பில் அன்று போலவே இன்றும் நான் வேதனை அடைகின்றேன். அதனை ஒருபோதும் மறக்க முடியாது – என்றார். (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பதில் என்ன என்பதைப் பற்றியும் வினவியுள்ளார்.

அப்போது சஜித்தின் ஆதரவாளர்கள் சஜித்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க நிலைமை தீவிரமானது. அமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட்ட பலர் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கவேண்டியவரின் தகுதி குறித்து பேசியதால் கூட்டம் தர்க்கமேடையாக மாறியது.

இதன்போது கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ தாம் பிறக்கும்போதே ஐக்கிய தேசியக் கட்சி ஆளாகவே பிறந்ததாகவும் மக்கள் தலைவனாக தமக்குத் தகுதி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதி அரசியல் கூட்டணி அமைக்கவுள்ள கட்சி அதற்குமுன்னர் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க வேண்டுமென சிலர் நேற்று வற்புறுத்தியதால் அது தொடர்பில் ஆராய விசேட குழுவை நியமிக்கவுள்ளதாக ரணில் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சபாநாயகர் கரு ஜயசூரியவையும் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கலாமெனச் சில எம்.பிக்கள் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் கடும் வாக்குவாதங்களின் பின்னர் எந்த முடிவுகளுமின்றி நேற்றைய கூட்டம் முடிவடைந்தது. ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கட்சி தீர்மானிக்கு வரை யாரும் இதைப் பற்றி பொதுவெளியில் பேசக்கூடாதென ரணில் இங்கு குறிப் பிட்டாரெனச் சொல்லப்படுகிறது. (ஐ)

## நவ.15...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு நீதிமன்றம் செல்ல ஜனாதிபதி முயற்சிக்க மாட்டார் என்று தான் நம்புகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவில் பிரதான கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் அவசியம் நடத்தப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்து ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் உள்ளிட்ட பொறுப்பு கூறவேண்டிய தரப்பினருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதைத் தவிர்க்க முடியாது.

இதனைச் செய்யக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உள்ளது. குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை முன்னெடுப்பதற்கு மாத்திரம் முடியும். அதனை ஒத்திவைக்க முடியாது.

மேலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பதிலாள் வேட்பாளர்களுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு இடமளிக்கப்போவதில்லை.

அதனால் அரசியல் கட்சிகள் தங்களுக்கு ஆதரவாகப் பதில் வேட்பாளர்களை நியமிக்க முயற்சிக்கவேண்டாம். பிரதான வேட்பாளருக்கு ஒத்ததாக ஆடை அணிந்தும் உருவத்தை மாற்றிக் கொண்டு செயற்படுவதும் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். இதற்கு நாங்கள் இணங்க மாட்டோம்.

அதேபோன்று ஜனாதிபதி வேட்பாளராகச் சுயாதீனமாக போட்டியிடக் களமிறங்கும் யாராவது பதிலாள் வேட்பாளர் போன்று செயற்பட்டால் அவர் பதிலாள் என்று பகிரங்கப்படுத்த ஆணைக் குழுவுக்கு நேரிடும். அவர்கள் எங்களுக்கு எதிராக நீதிமன்றம் சென்றாலும் பரவாயில்லை – என்றார். (ஐ)

## விக்கி எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சராகவிருந்த நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் இரு அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராக டெனிஸ்வரன் தாக்கல் செய்திருந்த வழக்கின் மீதான விசாரணைகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பூர்த்திசெய்தது.

தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

நீதியரசர் மஹிந்த சமயவர்த்தன, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன்னாலேயே நேற்று விசாரணைகள் பூர்த்தியடைந்தன.

நேற்று எதிர்மனுதாரரான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் சுமார் இரண்டரை மணிநேரம் வாதிட்டார். தொடர்ந்து மனுதாரர் டெனிஸ்வரன் சார்பில் அவரின் சட்டத்தரணி சுரேன் பெர்ணாண்டோ தமது பதில் வாதங்களை முன்வைத்தார்.

அதனையடுத்து தீர்ப்புக்காக வழக்கு ஓகஸ்ட் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பின் பின்னர் இந்த வழக்கில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத்தடை உத்தரவை நிறைவேற்றத் தவறியதன் மூலம் நீதிமன்றத்தை நீதியரசர் விக்னேஸ்வரனும் ஏனைய இரு எதிர் மனுதாரர்களும் அவமதித்தனர் என்று தெரிவித்து டெனிஸ்வரனால் தொடரப்பட்ட மற்றைய– வழக்கின் மீதான விசாரணை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, ஏப்ரல் 22ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரகடனப்படுத்தப்பட்டது. அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கும் எண்ணமிருக்கவில்லையென ஜனாதிபதி கடந்தமாதம் வெளிநாட்டுத் தூதர்களிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்முனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளேன்.

– இவ்வாறு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று மாலை நேரில் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கல்முனை வடக்கு விவகாரப் பிரச்சினைக்குத் தமிழ் – முஸ்லிம் சமூகத்தினரைப் பாதிக்காத வகையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் இதில் உறுதியாக இருக்கின்றார். எனவே, அவரை இன்றிரவு (நேற்றிரவு) நீங்கள் நேரில் சந்தித்து உரையாடுங்கள் – என்று நேற்று தம்மைச் சந்தித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் மேலும் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikathir



## ஸ்ரீ.ல.சு.க. – பொதுஜன பெரமுன 7 ஆம் கட்டப் பேச்சு வியாழனன்று!

புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடலின் ஏழாம் கட்டப் பேச்சு நாளை மறுதினம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தப் பேச்சு எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் இடம்பெறும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்றுள்ள கலந்துரையாடல்களில் கொள்கையளவிலான 25 காரணிகள் தொடர்பில் இருதரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் எனப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, முன்னாள் பொதுச்செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச ஆகியோரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் தலைவர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, விரிவுரையாளர் ஜகத் வெல்லவத்த ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






மட்டக்களப்பில் தமிழ் மக்கள் கூட்டணிக்கு மக்கள் தொடர்பு பணிமனை ஒன்றை அதன் செயலாளர் நாயகம் நீதியரசர் விக்கினேஸ்வரன் திறந்து வைத்த போது....





# சிறுபான்மையினரை அரவணைக்கின்ற ஒருவருக்கே மக்கள் காங்கிரஸ் ஆதரவு

## திருகோணமலை எம்.பி. அப்துல்லா மஃறூப் தெரிவிப்பு

விரைவில் நடக்கவிருக்கின்ற ஜனாதிபதிதேர்தலில்சிறுபான்மைசமூகத்தை அரவணைக்கும் ஒருவருக்கே எமது கட்சி ஆதரவாளிக்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கந்தளாவில் நேற்று முன்தினம்



மாலை இடம் பெற்ற கட்சி முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்–

கடந்த கால மஹிந்த அரசாங்கம் சிறுபான்மை சமூகத்தை தனது சர்வாதிகார ஆட்சியினால் அடக்கி ஒடுக்கி சிதறடித்தது. சுயாதீனக் குழுக்கள் இல்லாமல் ஆக்கப்பட்டு 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது

இதனால்தான் சிறுபான்மை கட்சிகள் ஆட்சிமாற்றத்தை கொண்டு வந்தன.

எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறவே ஆட்சிமாற்றத்தை விரும்பினோம் நாங்கள் அனைவரும் ஓரணியில் நின்று சிறுபான்மை சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ரெலோ போன்ற கட்சிகள், மலையக மக்களின் பிரதிநிதிகளான திகாம்பரம், மனோ, ராதா போன்றவர்களின் சிறுபான்மைகளின் ஒற்றுமை போன்று முஸ்லிம் சமூகம் கட்சிகளின் கூட்டமைப்பு உருவாக்கினால் எமது தலைவர் ரிஷாத் தாமும் பூரண ஒத்துழைப்பு வழங்குவார் என அன்றே கூறினார்.

இதன் உருவாக்கத்தில் கட்சியின் பெயரோ, சின்னமோ, தலைமைத்துவமோ தனிப்பட்ட வகையில் தேவையில்லை. சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு ஒற்றுமையே தேவை.

ஜனாதிபதி சுதந்திர சதுக்கத்தில் வைத்து அன்று பல பிரகடனங்களைச் செய்தார். இன்று மீண்டும் தேர்தலில் குதிக்கவுள்ளார் என ஊடகங்களுக்குச் சொல்கிறார். அதற்காக நீதிமன்றத்தை நாடுகிறார்.

எது, எப்படியோ முஸ்லிம் சமூகத்தைப் பிரித்து விடக்கூடாது.

இன நல்லுறவை வலுப்படுத்தக் கூடிய ஜனாதிபதியை வருகின்ற தேர்தலில் தெரிவு செய்வோம். அது ரணில் விக்கிரமசிங்கவாகவோ, கருவாகவோ, சஜித்தாகவோ, கோட்டாபயவாகவோ, மஹிந்தவாகவோ இருக்கலாம். யாராக இருந்தாலும் சரி, எமது சமூகத்தின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக்கூடிய – ஓரணியில் நின்று முடிவெடுக்கக் கூடிய – ஜனாதிபதியை நாம் தெரிவு செய்வோம். – என்றார்.

# வாகரைப் பகுதி மக்களின் இருப்புக்கே உலை வைக்கும் மணல் அகழ்வுப் பணி

## விக்னேஸ்வரன் நேரில் ஆராய்வு

மட்டக்களப்பு, ஜூலை 23

வாகரை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கட்டுமுறிவு முதல் வெருகல் வரையான கடற்கரைப்பகுதியில் உள்ள இல்மனைற் கனிம வளம் நிறைந்த மணலைச் சட்ட விரோதமாக அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததையடுத்து அப்பகுதி மக்கள் தமது இருப்பினை உறுதி செய்வதற்கும் தமது வளத்தினை பாதுகாப்பதற்குமாக தொடர் போராட்டங்களை மேற்கொண்டுவரும் நிலையில் அப்பிரதேச மக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுடன் அந்தப் பகுதிக்கு நேரில் சென்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் பார்வையிட்டுள்ளார்.

கட்டுமுறிவு முதல் வெருகல் வரையான கடற்கரை பகுதியில் ஒரு நாளைக்கு 600 தொன் (150 பார ஊர்தி அளவு) மணல் வீதம் 30 வருடங்களுக்கு அகழ்ந்தெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக காட்டப்படும் ஆவணங்கள் சட்டரீதியாக பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அந்தப் பகுதி மக்களுக்கு தெரியப்படுத்தவோ கருத்தறியவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும்–

மக்களது ஒப்புதல் பெறப்பட்டதாக இணைக்கப்பட்டிருக்கும் கையொப்பப் பட்டியல் கூட போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் வகையில் அந்தக் கையொப்பப் பட்டியலில் இருப்பது தமது கையொப்பம் இல்லை எனப் பலர் சத்தியக் கடதாசி மூலம் தந்துள்ளார்கள் என அப்பிரதேச சமூக செயற்பாட்டாளர்கள் எடுத்துக் கூறியிருந்தனர்.

இவ்விடயம் குறித்து உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தம்மையும் தமது பிரதேசத்தையும் பாதுகாக்குமாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரனிடம் வாகரை கதிரவெளி மக்கள் வேண்டுகோள் விடுத்தி



ருந்தமையையடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிறு நண்பகல் அவர் அவ்விடங்களுக்குச் சென்று ஆராய்ந்ததுடன் ஆவணங்களை பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இலங்கை நீதித்துறையில் நீண்ட அனுபவம் பெற்றவரான நீங்கள் தான் இவ்விடயத்தில் எமக்கு உறுதுணையாக இருந்து நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என அப்பகுதி மக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் கேட்டுக்கொண்டார்கள். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2019 இல் வெளியிடப்பெற்றது.